பொதுசன நூலகம்
[illegible]
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Saturday மெயில்
01 - 34
22-05-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin



# எரிபொருள் விலை உயர்வுக்கு இந்தியர்களும் சீனர்களுமே காரணம்...?

இரு வருடங்களுக்கு முன்னர் உலகில் உணவுப் பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்திருந்த போது அதற்கு இந்தியர்களும் பெருமளவுக்குக் காரணம் என்று அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்த கருத்து இந்தியாவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

இந்திய இடதுசாரிக் கட்சிகளே இதற்காக புஷ்ஷைக் கண்டனம் செய்வதில் முந்திக் கொண்டன. பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி அன்றைய அமெரிக்க ஜனாதிபதியின் கருத்தை 'கொடூரமான ஜோர்ஜ்' என்று வர்ணித்திருந்தார். புஷ்ஷின் கருத்துத் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டுமென்று பாரதிய ஜனதா கட்சி கோரிக்கை விடுத்திருந்தது.

(2ஆம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

220510-1.indd 1

## எரிபொருள்...

(முன்பக்கத் தொடர்ச்சி)

உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு இந்தியர்களும் பெருமளவுக்குக் காரணம் என்று புஷ் சொன்னாரென்றால் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா உலகில் எரிபொருட்களின் விலை உயர்வுக்கு இந்தியர்கள் காரணமென்று கடந்த வாரம் கூறியிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இந்தியாவை மாத்திரம் ஒபாமா குறிப்பிடவில்லை. சீனர்களையும் அதில் சேர்த்துக் கொண்டார்.

ஆனால், ஒபாமாவின் கருத்து இந்தியாவில் எந்தவிதமான சர்ச்சையையும் கிளப்பியதாக இதுவரை செய்திகள் வெளியாகவில்லை.

கடந்த வாரம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ஒபாமா தற்போதைய சர்வதேச பொருளாதார மந்த நிலையினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் அமெரிக்க நகரங்களில் ஒன்றான நியூயோர்க் மாநிலத்தின் பஃபலோவுக்குச் சென்றிருந்தார். அங்கு பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர்;

'இந்தியர்களும் சீனர்களும் பெரும் எண்ணிக்கையில் கார்களை வாங்குகிறார்கள். அதனால், எரிபொருட்களின் மீது பெருமளவு நெருக்குதல்கள் ஏற்படுகின்றன. இது விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக இருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மக்கள் தங்களது போக்குவரத்துத் தேவைகளுக்காக கார்களில் தங்கியிருப்பதைவிடவும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவதே சிறந்தது. அவ்வாறு செய்வது சுற்றுச் சூழலுக்கும் நல்லது என்று கூறிய ஒபாமா, 'எரிபொருள் விலை கடுமையாக அதிகரித்துக் கொண்டு போவதற்கான காரணங்கள் குறித்து அமெரிக்க மக்களுக்கு எப்போதுமே உண்மை நிலைவரம் விளங்குவதாக இல்லை. சீனா, இந்தியா போன்ற நாடுகள் பெருமளவில் கார்களை வாங்குகின்றன. அதனால், பெற்றோலியப் பொருட்களுக்கு கிராக்கி அதிகரிக்கிறது. இந்தக் கிராக்கி தொடர்ந்து அதிகரிக்கவே செய்யும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

பஃபலோ நகருக்கு கடந்த வருடம் மேற்கொண்டிருந்த ஒரு விஜயத்தின் போதும் ஒபாமா இந்தியர்களினால் ஆட்சேபிக்கப்படக்கூடிய கருத்தொன்றைத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



**உலகில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு இந்திய நடுத்தர வர்க்கத்தினரே காரணம் என்று இரு வருடங்களுக்கு முன்னர் புஷ் கூறியிருந்தார்**

பெங்களூர் போன்ற இடங்களில், வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் அமெரிக்கக் கம்பனிகளுக்கு வரிச் சலுகை அளிப்பதை நிறுத்திவிடப் போவதாகவும் பஃபலோ போன்ற அமெரிக்க நகரங்களில் தொழில் வாய்ப்புகளை அதிகரிக்கும் கம்பனிகளுக்கே வரிச்சலுகைகள் அளிக்கப்படும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்தியாவில் நடுத்தர வர்க்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது பொருட்களின் உலகில் விலைகள் அதிகரிப்பதற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றது என்ற புஷ்ஷின் கருத்தையே ஒபாமாவும் கொண்டிருக்கிறார் என்பதையே அவரின் பஃபலோ உரை உணர்த்துகிறது.

இரு வருடங்களுக்கு முன்னர் மிசோரியில் மகாநாடொன்றில் உரையாற்றிய ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷிடம் உணவு விலை அதிகரிப்பு குறித்து கேள்வி கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர் 'அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஏற்பட்டு வரும் சுபிட்சத்தின் விளைவாக உலகில் உணவுப் பொருட்களுக்குக் கிராக்கி அதிகரித்து வருகிறது. இந்தியாவில் 35 கோடி மக்கள் நடுத்தர வர்க்கத்தினர் என்று வகைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்காவின் முழு சனத்தொகையையும் விட இந்திய நடுத்தர வர்க்கத்தினரின் தொகை பெரியது. வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கும் போது அவர்கள் சிறந்த போஷாக்குடைய் உணவு வகைகளைக் கூடுதலாக நாடுகிறார்கள். இதன் விளைவாக உணவுப் பொருட்களுக்கான கிராக்கி அதிகரிக்கிறது. அதன் காரணத்தினாலேயே உலகில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன என்று கூறியிருந்தார் என்பது அவதானிக்கத்தக்கது.

உண்மையிலேயே உலக உணவு விலையுயர்வுடன் இந்தியர்களைத் தொடர்புபடுத்தும் வகையிலான கருத்தை முதலில் வெளியிட்டவர் புஷ் அல்ல. அவரின் வெளியுறவு அமைச்சராக இருந்த கொண்டலீஸா றைஸ் தான். இந்தியாவிலும் சீனாவிலும் உள்ள மக்களின் உணவுப் பழக்கங்களில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற முன்னேற்றமும் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மீது அந்த நாடுகள் விதித்திருக்கும் கட்டுப்பாடுகளும் உலகளாவிய உணவு நெருக்கடிக்கான முக்கிய காரணிகளாக இருக்கின்றன என்று கொண்டலீஸா றைஸ் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'முதற் தடவையாக டாக்ஸி ஓட்டுகிறேன்'



டாக்ஸியில் பயணம் செய்து கொண்டிருந்த நபர் ஒருவர் சாரதியை அவரது தோளில் தட்டி எதையோ கேட்கவிரும்பினார்.

சாரதி அதிர்ச்சியடைந்தவராகத் தடுமாறி அலறியடித்துக்கொண்டு காரை அங்குமிங்குமாக ஓட்டினார். பின்னர் ஒருவாறாக தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மதில் ஓரமாக டாக்ஸியை நிறுத்தினார். வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு ஒழுங்கைகளுக்குள் ஓடித்தப்பித்துக் கொண்டார்கள். அதிர்ஷ்டவசமாக விபத்து ஏதும் நிகழவில்லை.

பயணியும் பயந்துபோனார். சாரதியிடம் மன்னிப்புக் கோரினார். 'உங்கள் தோளில் மெதுவாகத்தானே ஒரு தட்டுத் தட்டினேன். அதற்கு ஏன் இந்தளவு தூரம் பயந்து பதறினீர்கள்' என்று சாரதியைக் கேட்டார் பயணி.

சாரதி கூறினார், 'மன்னித்துக் கொள்ளுங்கள், தவறு உங்கள் மீது இல்லை. தவறு என்னுடையதே. நான் கடந்த 25 வருடகாலமாக பிரேத வண்டிகளையே ஓட்டிக்கொண்டிருந்தேன். இன்றுதான் முதற்தடவையாக டாக்ஸி ஓட்டுகிறேன்'.

## விமான...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

153 பயணிகளுடன் யேமன் தலைநகர் சானாவில் இருந்து கொமறோஸ் தீவுகள் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த வேளை சீரற்ற காலநிலை காரணமாக அந்த ஜெட் பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானது. 'ந்து சமுத்திரக் கரையோரமாக தேடுதல் நடத்திய மீட்புப் பணியாளர்கள் 12 வயது சிறுமியொருத்தியை மாத்திரம் உயிருடன் மீட்டனர்.

2003 ஆம் ஆண்டு சூடானில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 3 வயதுச் சிறுவன் ஒருவனைத் தவிர ஏனைய சகலரும் [116] பலியாகினர்.

1995 ஆம் ஆண்டு கொலம்பியாவின் மேலாக நடு வானில் வெடித்து விமானம் சிதறிய சம்பவத்தில் 9 வயதுச் சிறுமியொருத்தி மாத்திரம் உயிர்தப்பினாள்.

இரு வருடங்கள் கழித்து வியட்நாம் ஏயார் லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளானதில் 65 பேர் பலியாகினர். தாய்லாந்து பையன் ஒருவன் மாத்திரம் உயிர்தப்பினான்.

தாய்வானின் ஜெட் விமானமொன்று 1998 இல் விபத்துக்குள்ளானதில் 196 பயணிகள் கொல்லப்பட்டனர். பத்து வயதுச் சிறுவன் ன் ஒருவன் மாத்திரம் காயங்களுடன் மீட்கப்பட்டான். ஆனால், அவனும் சில மணித்தியாலங்களின் பின்னர் இறந்துவிட்டான்.


இந்த சம்பவங்களையடுத்து விமான விபத்துகளில் சிறுவர்கள் உயிர்தப்பக் கூடிய சாத்தியங்கள் அதிகமாக இருக்கிறதா என்பது குறித்து ஆராய்ச்சியொன்றில் விமான சேவை பாதுகாப்பு நிபுணர்கள் இறங்கியிருப்பதாகவும் பி.பி.சி. தெரிவித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

# ‘அரசியல்தான் இனிமேல் எனது முழுநேரப் பணி’

நடிப்புத்துறை என்பது இலாபத்தை எதிர்பார்ப்பது. அரசியல் என்பது இலாபத்தை எதிர்பாராதது. நேர்மையாக அரசியல் செய்பவர்கள் எப்போதும் தமது சொத்துகள்,வியாபாரங்களை இழந்தே வந்துள்ளனர் எனத் தெரிவிக்கும் பிரபல நடிகையும் ஐ.தே.க.வின் கம்பஹா மாவட்ட எம்.பி.யுமான உபெக்ஸா ஸ்வர்ணமாலி தனது கணவரின் விருப்பத்தினாலேயே தான் அரசியலில் இறங்கியுள்ளதாகவும் கூறினார்.



உபெக்ஸா ஸ்வர்ணமாலி எமக்கு வழங்கிய பேட்டி விபரம் வருமாறு;

**கேள்வி:உங்களது குடும்பப் பின்னணியைப் பற்றி?**

**பதில்:** எனது பெற்றோர் வெளிநாட்டில் பணிபுரிந்ததால் நான் பிறந்தது, பாடசாலை சென்றது எல்லாம் குவைத்தில்தான். விடுமுறை காலங்களில் இலங்கை வந்திருந்தாலும் 2004 ஆம் ஆண்டில்தான் இங்கு நிரந்தரமாகக் குடியேறினேன். குவைத்திலுள்ள இந்திய பாடசாலையொன்றில் ஆங்கிலமொழி மூலமே படித்தேன். பட்டப்படிப்பின் நிமித்தமே இலங்கை வந்தேன். ஒரு சந்தர்ப்பவாதத்தால் நடிப்புத் துறைக்குள் நுழைய வேண்டியதாயிற்று. பெற்றோருக்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. தற்போது எனது தந்தை இல்லை. தாய் மட்டுமே இருக்கிறார்.

**கேள்வி: உங்களது அரசியல் பிரவேசத்திற்கு காரணமாக அமைந்தது என்ன?**

**பதில்:** எனது கணவரது விருப்பத்தினாலேயே நான் அரசியலுக்கு வந்தேன். எனினும் சமூக சேவைகள் மீது எனக்கு எப்போதுமே விருப்பம் இருந்தது. சிறுவர் இல்லம், மகளிர் சம்பந்தப்பட்ட விடயங்களில் சேவைபுரிய வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு சிறுவயது முதலே இருந்தது. எனினும், அதை அரசியல் ஊடாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்ததில்லை. அரசசார்பற்ற நிறுவனம்,பொது சமூக சேவைகள் மூலம் இவற்றைச் செய்யவே எதிர்பார்ப்பு இருந்தது.

**கேள்வி: நடிப்புத் துறைக்கும் அரசியலுக்கும் என்ன வித்தியாசத்தை உணர்கிறீர்கள்?**

**பதில்:** கட்டாயம் இது [அரசியல்] பெரிய சவால். பொழுதுபோக்குத் துறையும் அரசியலும் முற்றிலும் வேறுபட்ட இரு விடயங்கள். எனினும் இலங்கையைப் பொறுத்தவரை நடிக,நடிகைகள் மக்களுடன் மிகவும் நட்புறவுடன் இருக்க வேண்டியது போல் அரசியல்வாதிகளும் அந்தளவு நெருக்கமாக இருக்க வேண்டுமென இலங்கை மக்கள் எதிர்பார்க்கின்றனர். உண்மையில் நாட்டுக்குப் பணிபுரிவதை விடவும் அதிகமாக இவ்வாறான நெருக்கத்தையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். விசேடமாக கிராமப்புறங்களில் இந்த நிலைமை நிலவுகிறது. தொழிலைப் பொறுத்த வரையில் அரசியல்தான் இனி முழுநேரப் பணி. நடிப்புத் துறையும் கூடத்தான். எனினும் தற்போது முன்னுரிமை அரசியலுக்கே நடிப்புத்துறை என்பது மக்களை ஏமாற்றி மக்களின் திருப்திக்காக இலாபத்தை எதிர்பார்த்துச் செய்வது. எனினும் அரசியலில் இலாபம் எதிர்பாராது மக்களின் நலனுக்காக உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும். உண்மையில் நேர்மையான அரசியல் செய்பவர்கள் தங்களது சொத்துகளை,வியாபாரங்களை இழந்தே வருகின்றனர்.

**கேள்வி: பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்ட முதல்நாள் அனுபவம் எப்படியிருந்தது?**

**பதில்:** இதில் எனது கட்சித் தலைமைத்துவத்துக்கும் சிரேஷ்ட உறுப்பினர்களுக்குமே நன்றி சொல்ல வேண்டும். முதலாவது அமர்வுக்கு முன்னதாகப் பாராளுமன்ற நடவடிக்கைகள் குறித்துத் தெளிவுபடுத்த கூட்டங்கள் நடத்தினர். முதலாவது அமர்வில் பேச வேண்டி வராது என்று கூறினார்கள். அத்துடன்,சபையில் எனது ஆசனமும் கொஞ்சம் பின்வரிசையில் தான் இருக்கிறது. இதனால் சபையில் நடப்பவற்றை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. முதலாவது நாள் அமர்வில் அவதானிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய வேண்டியேற்படாததால் மனம் சற்று அமைதியாக இருந்தது. எனினும், அரசியலுக்குப் புதிது என்பதால் சிலவற்றைப் புரிந்துகொள்வதில் கஷ்டமாக இருந்தது. இதன்போது எமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களது, ஜனநாயக தேசியக் கூட்டணி போன்ற ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களது ஒத்துழைப்பைப் பெற்று இதுவரை நன்கு செயற்பட முடிந்துள்ளது.

**கேள்வி: நீங்கள் தெரிவான கம்பஹா மாவட்டத்தில் ஐ.தே.க.வைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் போட்டியிட்டபோதும் அவர்களை விடவும் அதிக விருப்பு வாக்குகளை உங்களால் பெற முடிந்தமைக்கான காரணமாக எதைக் கருதுகிறீர்கள்?**

**பதில்:** கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணிப் பொதுவேட்பாளராக இருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்தமையே இதற்கான ஒரு காரணம். எனினும், மக்களின் அபிமானத்தைப் பெறக் கடவுள் எனக்கு ஆசீர்வாதம் தந்துள்ளார். மக்கள் என்னை ஏற்றுக்கொண்டிருக்காவிட்டால் வாக்களித்திருக்கமாட்டார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கலைஞர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளித்த போதும் சற்றுப் புகழ்பெற்ற நடிகை என்ற வகையில் நான் மட்டுமே ஜெனரல் பொன்சேகாவுக்கு ஆதரவளித்தேன். இதனால் நான் புகழ்பெற்ற ‘பபா’ தொலைக்காட்சி நாடகத்தையும் எனக்கு இழக்க வேண்டியேற்பட்டது. எனவே, எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காகவே பெரும்பாலானோர் என்னை வாக்களித்து வெற்றி பெறச் செய்துள்ளனர்.

**கேள்வி: அரசியலில் உங்களது எதிர்கால இலக்கு என்ன?**

**பதில்:** உண்மையில் அரசியலுக்கு வர வேண்டுமென்ற எண்ணம் எனக்கிருந்ததில்லை. எனினும், பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் எனக்கென்று பொறுப்புள்ளது. எதிர்க்கட்சியிலிருந்து மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் அரசின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டவும் வேண்டும். அத்துடன், நான் மன்றம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறேன். அதன் மூலம் மக்களுக்குச் சேவை செய்வதே எனது நோக்கம். பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள்,பாதுகாப்புப் பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு.

**கேள்வி: அரசியல் தவிர, வேறு எந்தத் துறையிலாவது ஆர்வம் காட்டும் எதிர்பார்ப்பு இருக்கிறதா?**

**பதில்:** எனக்கு வேறு எந்த நோக்கங்களும் கிடையாது. நடிப்புத்துறையை கைவிடமாட்டேன். எனவே, அரசியல் மற்றும் நடிப்புத்துறைக்கே எனது காலம் போதுமானதாக இருக்கும். அத்துடன், குடும்ப வாழ்க்கையையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. சட்டப்பட்டப்படிப்பை மேற்கொள்வது பற்றி எனது கணவருடன் பேசியுள்ளேன்.

டிட்டோகுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான விபத்துக்களில் தன்னந்தனியாக உயிர் தப்பிய சின்னஞ்சிறுசுகள்




இருவாரங்களுக்கு முன்னர் லிபியாவின் திரிபோலி விமான நிலையத்தில் இடம் பெற்ற மோசமான விமான விபத்தில் 9 வயது டச்சு பையனைத் தவிர அதில் பயணம் செய்த வேறு எவருமே உயிர்தப்பவில்லை என்ற செய்தி உங்களுக்குத் தெரியுமல்லவா?

பயணிகளும் விமானப் பணியாளர்களுமாக 103 பேர் அந்த விபத்தில் பலியாகினர்.

ரூபென் வான் அசவ் என்ற டச்சுச் சிறுவன் தனது பெற்றோர் மற்றும் சகோதரனுடன் தென்னாபிரிக்காவில் சஃபாரி சுற்றுலாவை மேற்கொண்ட பின்னர் நாடு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே லிபிய விமான சேவையான 'ஆபிரிக்கியா' வுக்குச் சொந்தமான விமானம் திரிபோலி விமான நிலையத்தில் தரையிறங்கிய போது வெடித்துச் சிதறியது. பெற்றோரையும் சகோதரனையும் பலிகொடுத்த ரூபென் லிபியாவில் அவசர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் ஓரளவு தேறிய நிலையில் சொந்த நாட்டுக்குக் கூட்டிச் செல்லப்பட்டுள்ளான்.

பெற்றோரின் திருமண வருடாந்தக் கொண்டாட்டங்களின் ஓரங்கமாகவே தென்னாபிரிக்கச் சுற்றுலாவுக்கு பெற்றோர் மற்றும் தனது மூத்த சகோதரன் சகிதம் ரூபென் சென்றிருந்தான். சகலரையும் பறிகொடுத்த நிலையில் அவனைத் தற்போது பாட்டியார் பொறுப்பேற்றிருக்கிறார். ரூபென் நெதர்லாந்தின் ரில்பேர்க் நகரைச் சேர்ந்தவன்.


அந்த விமானத்தில் பயணம் செய்த ஏனைய சகலருமே பலியாக ரூபென் மாத்திரம் காயங்களுடன் உயிர்தப்பிய செய்தி சகலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. சர்வதேச ஊடகங்கள் அச்செய்திக்குக் கொடுத்த முக்கியத்துவம் காரணமாக ரூபென் இப்போது உலகப் பிரபல்யமான பையனாகிவிட்டான்.

இதையடுத்து விமான விபத்துகளில் ரூபென் போன்று தன்னந்தனியாக உயிர் தப்பிய சிறுவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா என்ற ஆராய்ச்சியில் இறங்கிய பி.பி.சி. கடந்தவாரம் வெளியிட்ட தகவல்கள் மிகவும் சுவாரஸ்யமானவையாக இருக்கின்றன.

கடந்த வருடம் ஜூன் மாத இறுதியில் ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோரமாக யேமனில் இடம்பெற்ற விமான விபத்தில் 12 வயது சிறுமி ஒருத்தி மாத்திரம் உயிர்தப்பியிருந்தாள்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## 'நானல்லவா பொய் சொன்னேன்'



மரணமடைந்த பிறகு சொர்க்கத்துக்குப் போன மூவரை வாசலில் நின்ற காவலர் உள்ளே அனுப்புவதற்கு முன்னர் சில நிபந்தனைகளை விளக்கிக் கூறினார்.

'சொர்க்கத்தில் நீங்கள் பிரவேசித்த பிறகு எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால், ஒரு போதுமே பொய் கூறாதீர்கள். பொய்யைக் கூறுவீர்களேயானால், இந்தப் பிரபஞ்சத்திலேயே மிகவும் அருவருப்பான தோற்றமுடைய பெண்களுடனேயே உங்கள் காலத்தைக் கழிக்க வேண்டியிருக்கும்' என்று காவலர் கூறினார்.

மூவரும் நிபந்தனைகளுக்கு இணங்கிக் கொண்டார்கள். முதலாவது நபர் தான் பூவுலகில் மிகப் பெரிய செல்வந்தனாக இருந்ததாக ஒருவார காலத்துக்குப் பிறகு ஒரு பொய்யைக் கூறிவிட்டார்.மறுகணமே அவருக்கு அருகே அவர் முன்னென்றுமே கண்டிராத வகையிலான அருவருப்பான தோற்றமுடைய பெண் ஒருவர் கொண்டு வந்து விடப்பட்டாள்.

சிலவாரங்கள் கழித்து இரண்டாவது நபரும் பூவுலகில் தான் மிகவும் மிடுக்கான ஆணாக தோற்றமளித்ததாக ஒரு பொய்யைக் கூறவே அவருக்கு அருகிலும் அருவருப்பான தோற்றமுடைய பெண்ணொருத்தி கொண்டுவந்து விடப்பட்டார்.

இருவருமே தங்களுக்கு கிடைக்கப் பெற்ற அருவருப்பான பெண்களுடன் சொர்க்கத்தில் மிகுந்த கவலையுடன் உலா வந்தனர். மூன்றாவது நபர் நினைத்துப் பார்க்கவே முடியாத அழகான கவர்ச்சியான பெண்ணொருத்தியுடன் கைகோர்த்த வண்ணம் எதிரே வந்ததை இவர்கள் கண்டு அதிசயித்துப் போயினர்.

'எங்களுக்கு இந்த அருவருப்பான பெண்களுடன் வாழ வேண்டுமென்ற தண்டனை கிடைத்திருக்கும்போது உனக்கு மாத்திரம் எவ்வாறு இத்தகையதொரு பேரழகி கிடைத்தாள்" என்று இரு நபர்களும் ஏகோபித்த குரலில் கேட்டனர்.

அதற்கு மூன்றாவது நபரல்ல, அவருடன் வந்த பேரழகிதான் பதில் சொன்னாள்.

'நான் அல்லவா பொய் சொல்லிவிட்டேன்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

220510-1.indd 4
Process Cyan Process Magenta Process Yellow

# பலி ஆடுகளாகும் பணிப்பெண்கள்



தமது குடும்பசுமையை சுமப்பதற்காக வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் சென்ற பலர் தமது குடும்பத்திற்கே சுமையாகவும் நடைபிணங்களாகவும் உடல்,உள ரீதியாகப் பாதிக்கப்பட்டு திரும்பி வரும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.

வெளிநாட்டு வேலைகளில் மோகம் கொண்டும் தமது அன்றாட தேவையை நிறைவேற்ற முடியாமலும் கடல்கடந்து சென்று உழைக்கும் நோக்குடன் எண்ணற்ற எதிர்பார்ப்புகளைச் சுமந்து வெளிநாட்டு வேலைக்காகச் செல்லும் பெண்கள் இன்று பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறு வெளிநாட்டுப் பணிப்பெண்ணாக வேலைக்குச் சென்று எவ்வித பயனுமின்றி பல்வேறு பிரச்சினைகளுடன் நாடு திரும்பிய யுவதியொருவர் தனது அனுபவத்தை கூறுகையில்;

'நான் சவூதி அரேபியாவில் வீடொன்றில் வேலை செய்தேன். நான் வேலை செய்த இடத்தில் முதல் மாத சம்பளத்தைக் கேட்டேன். அவர்கள் தரவில்லை. பின்பு ஐந்து மாதம் சென்று சம்பளத்தை கேட்டபோது என்னை அடித்தார்கள்.

சாப்பிட, அணிய ஒன்றும் தரவில்லை. சாப்பிடாமல் பல வாரங்கள் பட்டினியாக இருந்தமையினால், தொண்டைக்குழியில் காயமேற்பட்டு இரத்த வாந்தி வந்தது. இதனால் நான் அவ்வீட்டிலிருந்து என்னை கூட்டிச் சென்ற முகவர் நிலையத்திடம் சென்று இரண்டு தடவைகள் முறையிட்டேன். அவர்கள் என்னை மீண்டும் அழைத்துச் சென்று அவ்விடத்திலேயே வேலைக்கமர்த்தினர்.

அவ்வீட்டிலிருந்து மீண்டும் யாருக்கும் தெரியாத தூர இடத்திற்கு ஓடிச்சென்றேன். இவ்வாறு செல்கையில் மயக்கமுற்று கீழே விழுந்தேன். என்னை வேறு சிலர் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை வழங்கினார்கள். பின்பு என்னை சொந்த நாட்டிற்கே அனுப்பிவைத்தார்கள். எனது எதிர்பார்ப்புகள் அனைத்தும் அழிந்துவிட்டன.

எனது தந்தை சுகவீனமுற்றிருந்ததால் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்குடன் வெளிநாடு சென்ற நான் ஒரு நோயாளியாக குடும்பத்திற்குப் பாரமுடையவளாக மாறிவிட்டதை நினைக்கும்போது வாழ்க்கையே வெறுத்துவிட்டது' என்கிறார்.

இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்பிற்காக செல்லும் பெருமளவான பெண்களினதும் ஆதங்கமும் இவ்வாறுதானுள்ளது.

ஆண்களை விட பெண்களே அதிகளவில் வெளிநாட்டு வேலைக்குச் செல்கின்றனர். இதனால் அவர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளும் பாதிப்புகளும் அதிகமாகவேயுள்ளன.

பெண்களினது தொழில்துறையினை ஊக்குவித்து, இலங்கையில் பல்வேறு தொழில் நிறுவனங்களை உருவாக்கி, வழியமைத்துக் கொடுத்தல், வெளிநாட்டுக்குச் செல்லும் பெண்கள் என்ற ஒரு பிரிவினரே உருவாகியிருக்க மாட்டார்கள்.

தான் அனுபவித்த இன்னல் தொடர்பாக ராகமையைச் சேர்ந்த யுவதியொருவர் கூறுகையில்;

'நான் கடன்பட்டு வெளிநாட்டு வேலைக்குச் சென்றேன். ஆனால், வேலை செய்த இடத்தில் சம்பளம் தரவில்லை. சம்பளம் தருமாறு பலமுறை கேட்டேன். இதனால் கோபமுற்று எஜமானி என்னை கீழே தள்ளி காலால் உதைத்தார். எனது வயிற்றிலும் உதைத்தார். என்னால் தாங்க முடியாமல் திருப்பி அடித்தேன். இதனால் அவர் என்னை சுடுவதற்காக துப்பாக்கியை எடுத்துவிட்டு வந்தார். நான் அவரை வெளியே தள்ளி கதவை மூடிக் கொண்டேன். இரண்டாவது மாடியிலிருந்து வெளியே வருவதற்கு என்னிடம், சீலைத் துணியொன்றே இருந்தது. அதனை எடுத்து ஜன்னலில் கட்டி வெளியே வந்தேன். எனது வயிற்றில் அவர் உதைத்ததால் சிறுநீரகப் பை வீங்கி, சிறிது நாட்கள் சிறுநீரகம் வெளியேறுவது சிரமமாகவிருந்தது.

நான் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற ஆசையுடன் செல்லவில்லை. குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்குடன் தான் வெளிநாட்டு வேலைக்கு மிகவும் சிரமப்பட்டு சென்றேன். எனக்கு நடந்த சம்பவம் வேறு எவருக்கும் ஏற்படக்கூடாது. உண்மையில் நான் கல்வி கற்றிருந்தால் இவ்வாறான நிர்க்கதிகளை சந்தித்திருக்க வேண்டியிருக்காது. எனது கணவன் போதைக்கு அடிமையாகி, சுகவீனமுற்றுள்ளார். அவரையும் எனது பிள்ளைகளையும் குடும்பத்தையும் பார்க்க வேண்டிய பொறுப்பு என்னையே சார்ந்துள்ளது. இப்போது நானும் சுகவீனமுற்று வீட்டிலிருக்கிறேன்' என்றார்.

இவ்வாறு வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் பெண்கள் தொடர்பிலான துயரக் கதைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். தமது குடும்பத்தின் வறுமையைப் போக்க வேறு வழியின்றி வெளிநாட்டுக்குப் பணிப்பெண்களாக செல்லும் இவ்வாறான அப்பாவிப் பெண்களின் நிலை குறித்து அரசும் வெளிவிவகார அமைச்சும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களமும் அக்கறை செலுத்தவேண்டும்.

இல்லாவிட்டால் மேற்கூறிய பெண்களைப் போன்றபலர் உடல்,உள ரீதியாகப் பாதிக்கப்பட்டும் குற்றுயிரும் குலையுயிருமாகவும் திரும்பும் நிலையே ஏற்படும். வெளிநாட்டு வேலைக்குச் சென்று தமது குடும்ப சுமையை குறைக்க நினைக்கும் இப்பெண்கள் தமது குடும்பத்திற்கே சுமையாக மாறுவதைத் தடுக்கவேண்டியது அரசினது பொறுப்பாகும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்கோஸி மனைவியின் 'தீராத' கவலை



பிரான்ஸ் ஜனாதிபதி சார்கோஸியை மணந்து கொண்டது முதல் எனது செக்ஸ் வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனது உடல் தேவையை போக்காமல் தனது பணியிலேயே பிஸியாக இருக்கிறார் சார்கோஸி எனப் புலம்பியுள்ளார் கார்லா.

இத்தாலியைச் சேர்ந்த மொடல் தான் கார்லா. பிரான்ஸ் ஜனாதிபதி சார்கோஸியைத் தீவிரமாகக் காதலித்துக் கரம்பிடித்தவர். இவர்களது காதல் உலக அளவில் பரபரப்பாகப் பேசப்பட்டது. இன்றும்கூட இந்தப் பரபரப்பு சற்றும் குறையாமல் விறுவிறுப்பாகவே போய்க்கொண்டிருக்கிறது.

இடையில் புதுக் காதலரைப் பிடித்து விட்டார் கார்லா என செய்திகள் வெளியாகின. இருப்பினும், இது புஸ்வாணமாகி விட்டது. சமீபத்தில் வெளியான ஒரு நூலில், கார்லா கூறியதாக ஒரு சுவாரஸ்யமான தகவல் வெளியாகியிருந்தது. அமெரிக்காவுக்கு சார்கோஸியுடன் கார்லா சுற்றுலா சென்ற போது கார்லாவும் ஒபாமாவின் மனைவி மிச்சலும் சந்தித்துப் பேசினர்.

அப்போது, மிச்சலிடம் கார்லா கூறுகையில்;

ஒருமுறை காலையில் நானும் சார்கோஸியும் படுக்கையில் பிஸியாக இருந்தோம். அப்போது ஒரு வெளிநாட்டு ஜனாதிபதி சார்கோஸியைப் பார்க்க வந்திருந்தார். இருப்பினும், எங்களால் படுக்கை அறையிலிருந்து வெளியே வர முடியவில்லை. இதனால், அந்த ஜனாதிபதியைக் காக்க வைக்க நேரிட்டது. உங்களுக்கு இப்படிப்பட்ட அனுபவம் நேர்ந்துள்ளதா என்று கேட்டு மிச்சலை நடுங்க வைத்தார் கார்லா.

கார்லாவின் கேள்வியைக் கேட்டு சற்று ஆடிப்போன மிச்சல், பின்னர் சுதாகரித்து சிரித்தபடி அப்படியெல்லாம் எனக்கு நேர்ந்ததில்லை என்று கூறி நழுவினார்.

இந்நிலையில்; சார்கோஸியை மணந்தது முதல் செக்ஸ் தேவை பூர்த்தியாகாமல் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார் கார்லா. இதுவும் ஒரு நூலில்தான் தெரிவிக்கப்பட்டுள்ளது. 42 வயதாகும் கார்லா, இது குறித்து ஜோனாதன் ஆல்டர் என்பவர் எழுதியுள்ள நூலில் கூறுகையில்; எனது கணவர் சார்கோஸி தனது பணியில்தான் தீவிரமாக உள்ளார். இதனால், எனது உடல் தேவைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றன.

எனக்கு விருப்பமான வரை செக்ஸில் ஈடுபடுவதை அவரது வேலைப்பளு தடுக்கிறது. இதனால், எனது செக்ஸ் தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமலேயே உள்ளன என்று கூறியுள்ளார் கார்லா.

கார்லா செக்ஸ் மீது அதிக மோகம் கொண்டவர். ஒரு ஆணுடன் மட்டும் உறவு கொள்வது மிகவும் போரடிக்கும் விடயம் என்று முன்பு ஒரு முறை கூறியிருந்தார்.

கடந்த காலங்களில் இங்கிலாந்து ராக் நட்சத்திரங்களான மைக் ஜேகர், எரிக் கிளாப்டன், பிரான்ஸ் நாட்டின் முன்னாள் பிரதமர் லாரன்ட் பேபியிஸ் ஆகியோருடன் நெருக்கமாக இருந்தவர்தான் கார்லா என்பது குறிப்பிடத்தக்கது.

# விரல் நுனியில் ஆபத்து



நீங்கள் மொபைல் போனில் அடிக்கடி எஸ்.எம்.எஸ்.அனுப்புவதில் ஆர்வம் கொண்டவரா? ஒரு நாளைக்கு சராசரியாக 100 முறைக்கு மேல், விரல்களால், 'டைப்' அடித்து எஸ்.எம்.எஸ்.அனுப்புபவரா? அப்படியானால் முதலிலேயே விழித்துக் கொள்ளுங்கள். வேண்டாம் விபரீதம்.

இதே எண்ணிக்கையில் எஸ்.எம்.எஸ். செய்த அமெரிக்க சிறுமி, ஆனீஸ் லெவிட்சுக்கு மணிக்கட்டு மரத்துப்போய், கடைசியில், மொபைல் போன் மட்டுமல்ல, எந்த ஒரு பொருளையும் கையில் பிடிக்கவே முடியாமல் போய் விட்டது. உங்களுக்கு மட்டுமல்ல, இப்படி 100 க்கு மேல் எஸ்.எம்.எஸ்.அனுப்புவோருக்கும், எஸ்.எம்.எஸ்.பார்ப்போருக்கும் கோளாறு வரும் என்று உறுதியாக சொல்ல முடியாவிட்டாலும், மருத்துவ ரீதியாக வாய்ப்பு உள்ளது என்பது மட்டும் நிச்சயம்.

இந்த பாதிப்புக்கு, 'கார்பல் டன்னல் சின்ட்ரோம்' என்று பெயர் கணினியில், கீ போர்டில் கை விரல்களை வைத்தபடி வேலை செய்வோருக்கும், அதிகமாக, 'மவுஸ்' பிடித்து வேலை செய்வோருக்கும் இந்த கோளாறு வரும். நீங்கள் கணினியில் வேலை செய்பவராக இருந்தால் இந்த அனுபவம் புரியும். எப்போதும் கீ போர்டில் கை விரல்களை வைத்தபடி, 'டைப்' செய்தும், 'மவுஸ்' பிடித்தும் கொண்டிருந்தால் கை விரல்களில் உள்ள நரம்புகள் பாதிக்கும், ரத்த ஓட்டம் சீராக இருக்காது.

முழங்கையில் இருந்து கை விரல்களின் நடுப்பகுதியில் ஒரு நரம்பு போகும். அதாவது வீதியின் நடுவே எப்படி தடுப்பு போடப்பட்டுள்ளதோ, அப்படி இந்த நரம்பு போகும். அடிக்கடி கணினி 'மவுஸ்' பிடிப்பதால், மொபைல் எஸ்.எம்.எஸ். அனுப்புவதால் இந்த நரம்பு பலவீனம் அடையும். ரத்த ஓட்டம் பாதித்து, திடீரென மரத்துப் போகும். இதனால், கை விரல்களில் உணர்ச்சியே இருக்காது. பின்னர் மொபைல் போன் மட்டுமல்ல, எந்த ஒரு பொருளையும் கை விரல்களால் பிடிக்கவே முடியாமல் போய் விடும். இதற்கு தீர்வு என்ன? அறுவை சிகிச்சை ஒன்று தான். அறுவை சிகிச்சை செய்தபின், மொபைல் போன் பயன்பாட்டை குறைத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும்.

மொபைல் போன் பயன்பாட்டை.கட்டுப்படுத்திக் கொண்டால், இந்த பிரச்சினைகள் எல்லாம் வராது. மொபைல் போன் எஸ்.எம்.எஸ். களில் வரம்பு மீறும் போது கை விரல்களில் ஒரு வித நமைச்சல் ஏற்படும். உள்ளங்கை அரிக்கும். போகப் போக ஒரு வித தடிப்பு உணர்வு ஏற்படும். கடைசியில் உணர்ச்சியே இல்லாமல் போய் விடும். கை விரல்கள் ஏதோ சம்பந்தம் இல்லாமல் ஒட்டிக் கொண்டிருப்பதை போல, எதற்கும் பயன்படாமல் போய்விடும்.

எஸ்.எம்.எஸ். மூலம் கைவிரல் மரத்துப்போய், அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஆனீஸ் லெவிட்ஸ் தன் அனுபவத்தை கூறுகிறார். எனக்கு மொபைல் போனில் எஸ்.எம்.எஸ். அனுப்புவது என்றால் மிகவும் பிடிக்கும். என்தோழிகள் எல்லாரும் தகவல் பரிமாறுவதே அதில் தான். போனில் பேசாமல், இப்படிச் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தோம்.

நான் ஒரு நாளைக்கு 00 க்கு மேல் எஸ்.எம்.எஸ். தகவல் அனுப்ப, விரல்களால் டைப் செய்வேன். அப்படி செய்த நான் ஒரு நாள் காலை எழுந்ததும் கைவிரல்களில் ஒருவித நமைச்சல் காணப்பட்டது. போகப் போக, விரல்களில் உணர்ச்சியே இல்லாமல் போய் விட்டது.

அடுத்த சில மணி நேரத்தில் உணவுமேசையில் உட்கார்ந்து சாப்பிட்டபோது விரல்களில் சூடு பட்டும் எதுவும் உணர்வே தெரியவில்லை. டாக்டரிடம் காட்டியதற்கு உடனே அறுவை சிகிச்சை செய்து கை விரல் நரம்பில் உணர்ச்சியூட்ட முடியும் என்று கூறினார். அறுவை சிகிச்சை செய்த பிறகு தான் என்னால் மொபைல் போனை கைவிரல்களால் பிடிக்க முடிகிறதா? இவ்வாறு கூறிய ஆனீசிடம் இப்போது எஸ்.எம்.எஸ். அனுப்ப முடிகிறதா? என்று கேட்டது தான் தாமதம் எஸ்.எம்.எஸ். சா அதை மறந்து ரொம்ப நாளாச்சு. எதுவாக இருந்தாலும் தோழிகளிடம் போனில் சில நொடிகள் பேசுவேன் என்று பளிச்செனச் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளிகளுக்கு இனிப்பென்றால் எதிரியா?




நீரிழிவு நோயாளிகள் என்று பார்க்கப்போனால் மருத்துவ கிளினிக்கில் அரை வாசியை விஞ்சியவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதிலும், நீரிழிவு கட்டுப்பாட்டில் இல்லாத நிலை மற்றும் விசேட நிலைகளை அவதானிக்க நீரிழிவுக்கென்றே தனி கிளினிக் ஜபினி ஆய்வு நிலையம் அதைவிடக் கண்காட்சிகள் இப்படி எல்லாம் அதன்பால் கவனஈர்ப்பைத் தூண்டுகின்றது. இங்கே நீரிழிவு நோயாளியின் உணவுக் கட்டுப்பாடு என்று கூறிவிட்டு அட்டவணை போட்டுக்கொண்டால் போதாது.நோயாளியின் மனம் என்பது தான் இங்கு கருதப்பட வேண்டியது.

நீரிழிவு நோயாளிகளுக்கு இனிப்புச் சாப்பிட எண்ணம் அதிகம் என்று தான் கூற வேண்டும். அநேகமான நோயாளர் இனங் காணப்பட்டு சில காலங்கள் வரை கட்டுப்பாடான உணவைக் கொண்டிருப்பினும் சிறிது சிறிதாகக் கால ஓட்டத்தில் கட்டுப்பாட்டை தளர்த்தி விடுவதே வழமை என்ற நிலை காணப்படுகின்றது. நாம் வெளியில் இருந்துகொண்டு பார்ப்பது சுலபம் ஆனால், நோயாளியின் மனநிலை நோயாளிக்குத்தான் தெரியும்.

நீரிழிவு நோயாளிகளுக்கு வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி சீவிப்பதா? என்ற விரக்தி காணப்படுகிறது, ஆசைக்கு எதுவும் சாப்பிட முடியாது என்ற கவலை, அப்படி ஒரு 'துறவறம்' என்ற எண்ணம். அதுபோக இன்சுலின் மருந்தேற்றும் நோயாளி என்றால்... நாம் சுகமாக நினைக்கலாம் ஊசியை ஏற்றிக்கொள்வது தானே என்று ஆனால், நமக்கு நாமே ஊசியை ஏற்றும் போது அதுவும் நோய்ப்பற்றிய விரக்தி,கவலை இவற்றுடன் என்றால் அது அனேக நோயாளிக்கு இதயத்தில் தான் வலியை உண்டுபண்ணும் தினம்தோறும், தவணைமுறையில் என்றே கூறவேண்டும்.

இவ்வாறு வலிசுமக்கும் நோயாளியை மருத்துவர் 'கடவுளின் அடுத்த படி' கூறுவதென்றால்....நோயாளிகள் மருத்துவர் அளவிற்கு படித்துவிட்டு வருவதில்லை. அவ்வளவு படித்திருந்தால் மருத்துவரிடம் வரமாட்டார்கள். இன்னும் மருத்துவம் மூடு மந்திரம் என்ற நிலை நம் சமூகத்தில் இருந்து அகவில்லை. இவ்வாறான இருநிலை நிலைகளும் நோயாளியை மருத்துவரிடம் இருந்து அன்னியப்படவே செய்கின்றது. நோயாளி மருத்துவரிடமிருந்து அன்னியப்பட்டால் நோயைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். அது ஒரு விஷவட்டமாக நகரும் என்றுதான் சொல்ல வேண்டும்.

நோயாளிகள் பலருக்கு இனிப்பு சாப்பிடுவதென்றால் அலாதிப்பிரியம் என்றுதான் சொல்ல வேண்டும். சிலவகை இனிப்புகளை உட்கொள்ள முடியும் என்றால் இவர்கள் மனங்களில் ஏற்படும் சந்தோசமும் அதிகம் நீரிழிவு நோயாளிகள் எல்லோருக்கும் இலகுவாகக் கிடைக்கும் இனிப்பு சீனி இதை 'விளையாட்டுப் பிள்ளைகள்' போல் கள்ளமாக உட்கொள்வதில் கொள்ளை இன்பம் இருக்கிறது. இவர்களுக்கு சீனி எதிரி என்றல்ல துரோகி என்றே கூறவேண்டும். ஆனாலும், இனிப்பு வகையில் இனிய நண்பர்கள் பலர் இருக்கின்றார்கள் இவ்விடயம் மக்கள் கண்ணில் படுமாயின் அவர்களுக்கு மகிழ்ச்சியானதொரு விடயமாகவே இருக்கும். அத்துடன், கட்டுக்கடங்க மறுக்கும் உணவுக் கட்டுப்பாட்டில் ஏற்படும் கடினத்தன்மையை சீர்செய்வதும் எளிமையாக்கிவிடும்'. அத்தோடு, இவர்கள் மனதில் உள்ள ஒரு முக்கிய கவலை நீங்கிவிடும். இதனாலும் இவர்களது நோயின் தீவிரமும் குறைவுறும். ஏனென்னில், கவலைப்படுவதால் உடல் இரசாயனவியல் மாற்றங்களினூடு நீரிழிவைக் கட்டுப்பாட்டில் இல்லாது போக செய்கின்றது.

Asprtame, Saccharin, Sucralose neotame, acesulfame potassium, stevia. இன்னும் Isomalt, Maltitol, Mannitol sorbitol இப்படியே Xylitiol என்று நீண்டபட்டியல் உள்ளது. இவர்கள் இனிய நண்பர்கள் என்பது பலருக்கு தெரியாது. இவ்விடயம் இவர்களின் குருதியில் வெல்லக்கட்டுப்பாட்டை ஏற்படுத்த மிகப்பெரிய உதவியாக இருக்கும்.

மேலும் ஒரு சந்தர்ப்பத்தைக் கருதி நோயாளிகளின் உடலில் புண்கள் இருப்பின் அவற்றில் கிருமித்தாக்கம் இருக்கும். இதன்போது குருதியின் வெல்லக்கட்டுப்பாடு என்பது மிகக்கடினம். அவ்வாறே குருதியில் வெல்லம் கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில் புண்கள் மாறாது. எனவே, ஒன்றை ஒன்று ஆள்கின்ற தன்மை காணப்படுகின்றது. இவற்றைக் கருதும் போது நோயாளியின் உணவுக்கட்டுப்பாடு, மருந்துகளைக் கொண்டு ஏற்படுத்தும் கட்டுப்பாடு இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இங்கே நோயாளியின் உணவுக்கட்டுப்பாடு என்பது நோயாளியின் மனதில் ஏற்படும் ஒரு பெரும் விடயம். இது சரிவர அமையாதவிடத்து மருந்துகளால் என்ன மந்திரத்தால் கூட மாங்காய் விழுத்துவது சாத்தியமில்லை. ஆகவே நோயாளியுடனான அன்னியோன்னியம், நட்புறவு மிகவும் தேவையானது. அதைவிட புரிந்துணர்வு மிகமிகத் தேவையானது.

புரிந்துணர்வு என்னும் போது டால்ஸ்ராயின் கருத்துப்படி 'பிரச்சினையை நமது கண்களினூடாகப் பார்ப்பதல்ல பிரச்சினைக்குட்பட்டிருக்கும் குறித்த நபரின் கண்ணினூடாகப் பார்ப்பதே' என்று தான் சொல்ல வேண்டும்.



இவ்வாறு புரிந்துணர்வுடன் மருத்துவம் செயற்படின் நோயாளிகள் மனதில் மகிழ்ச்சி நிலவும். அதுவே பெருமருந்தென்று கூறலாம். இந்த வகையில் நோயாளிகளின் மனதில் மகிழ்ச்சி நிலை கொள்ளும் விதமாக நோயாளிகளுக்குப் பயன்படுத்தத்தக்க இனிப்பு வகைகளை அறிமுகம் செய்வது அவர்களின் மனங்களில் ஒரு பெரும் பகுதியில் இருக்கும் கவலை, விரக்தியை நீக்கி நாமும் சுகதேகிகள் போன்று உள்ளத்தில் ஒரு தெம்மை ஏற்படுத்துவது என்பது உலகத்தில் பெரும் மருந்தாகவே கணிப்பிடப்படும்.

**டாக்டர் வெ.நாகநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## பதறாத காரியம் சிதறாது

வெள்ளவத்தை பஸ் நிலையத்திலிருந்து அலுவலகத்துக்குப் போகும் பதற்றத்துடன் கொட்டும் மழைக்கு மத்தியில் புறக்கோட்டை நோக்கி வந்த 100 ஆம் இலக்க பஸ்ஸில் ஏறினார் இளம் குடும்பஸ்தர் ஒருவர்.

பஸ்ஸில் ஏறிய அவர் வழக்கம் போலவே தனது திறமையைக் காட்டி ஒருவாறு பின் வரிசை ஆசனத்தைப் பிடித்து அமர்ந்து கொண்டார். பஸ் பயணிகளால் நிரம்பி வழிந்தது. அத்துடன் வெளியில் கொட்டும் மழை வேறு.

வழக்கம் போலவே எதனையும் பொருட்படுத்தாது அந்தக் குடும்பஸ்தர் குட்டித்தூக்கம் ஒன்றையும் போட்டார். திடீரென கண்விழித்த போது அவர் இறங்க வேண்டிய கொம்பனித் தெரு பஸ்தரிப்பிடம் வந்திருந்தது. கூட்டத்துடன் கூட்டமாக முண்டியடித்தவாறு இறங்கிய அவர் தனது அலுவலகம் உள்ள கொழும்பு, 15 க்கு செல்வதற்கான பஸ்ஸை எதிர்பார்த்துக் கொண்டு அவ்விடத்தில் நின்றார்.

அப்போ அந்த பஸ்ஸுக்குரிய காசை எடுப்பதற்காக ஜீன்ஸின் பொக்கட்டுக்குள் கைவிட்டவர் அதிர்ந்து போனார். அங்கு பேர்ஸைக் காணவில்லை. அந்த பேர்ஸுக்குள் ஒரு தொகைப் பணம் மற்றும் வங்கி அட்டைகள், ஏனைய தஸ்தாவேஜுகள் எனப் பல இருந்தன. அதிர்ந்து போன அந்தக் குடும்பஸ்தர் தான் வந்திறங்கிய பஸ்ஸைத் தேடிய போது அது சென்றுவிட்டிருந்தது.

உடனடியாக அவ்விடத்தில் வந்த ஆட்டோவொன்றை வாடகைக்கு அமர்த்தியவர் தான் வந்த பஸ்ஸின் அடையாளத்தைக் கூறி அதை விரட்டிப் பிடிக்குமாறு கூறினார். ஆட்டோவும் சீறிப்பாய்ந்து கொண்டு அந்த பஸ்ஸை விரட்டத் தொடங்கியது. ஒருவாறு குறிப்பிட்ட பஸ்ஸை புறக்கோட்டை பஸ் நிலையத்திற்கு முன்னால் வைத்து மடக்கிய அக்குடும்பஸ்தர் பஸ்ஸுக்குள் பாய்ந்து ஏறினார். நல்ல வேளை கையில் வைத்திருந்த பேக்கினுள் இருந்த ஒரேயொரு நூறு ரூபாவை ஆட்டோக்காரனின் கையில் திணித்த அவர் பஸ்ஸுக்குள் ஏறி தனக்கு தெரிந்த சிங்களத்தில் தனது பேர்ஸ் பஸ்ஸினுள் காணாமல் போய்விட்டது என்று கூறினார். இதையடுத்து பஸ்ஸிற்குள்ளும் பரபரப்பு தொற்றிக் கொண்டது. பஸ்ஸிற்குள் இருந்தவர்கள் அந்த குடும்பஸ்தருக்கு உதவும் வகையில் பஸ்ஸிற்குள் சல்லடை போட்டுத் தேடினர்.

இந்தக் குடும்பஸ்தருக்கு அருகில் அமர்ந்திருந்தவர்கள் தமது பேக்குகளைக் கூடத்திறந்து காட்டினர். இன்னும் சிலர் இவரின் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டனர், இன்னும் சிலர் பஸ்ஸில் வரும்போது பொருட்கள், பேர்ஸுகளில் கவனமாக இருக்க வேண்டுமென அறிவுரை கூறினர். இன்னும் சிலரோ இடைவழியில் இறங்கிய சிலர் குறித்து பிக்பொக்கட் காரனாக இருக்குமோ என சந்தேகம் தெரிவித்தனர்.

இந்த இளம் குடும்பஸ்தருக்கோ கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. ஏற்கனவே 2,3 தடவை இவர் தனது செல்போன்களை பஸ்ஸில் பறிகொடுத்துள்ளார். அதனால் இவர் மனைவியின் அறிவுரைப்படி தற்போது விலை குறைந்த செல்போனையே பாவித்துவரும் நிலையில் ஒரு தொகைப் பணம், அடையாள அட்டை, வங்கிக் கடன் அட்டைகளுடன் பேர்ஸ் காணாமல்போனதைத் தாங்க முடியவில்லை.

சரி பஸ்ஸுக்குள்ளும் பேர்ஸ் இல்லை. எடுத்தவனையும் பிடிக்க முடியவில்லை. கையில் இருந்த 100 ரூபாவையும் ஆட்டோக்காரனுக்கு கொடுத்தாகிவிட்டது. இனி அலுவலகத்துக்கும் போக வேண்டும். எதற்கும் மனைவிக்கு விடயத்தைச் சொல்ல விரும்பிய அவர் மனைவிக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து நடந்த விடயத்தையும் தான் பஸ்ஸை துரத்தி மடக்கிப்பிடித்து தேடுதல் நடத்திய விடயத்தையும் ஒன்றும் விடாமல் கூறிமுடித்தார்.

அதன் பின் மனைவியிடமிருந்து வந்த பதில் அவரின் முகபாவனையில் பல மாறுதல்களை ஏற்படுத்தியது. ஒன்றுமே பேசாது பஸ்ஸுக்குள் இருந்தவர்களிடம் நன்றி சொல்லிவிட்டு இறங்கிய அவர் மீண்டும் பேக்கினுள் தேடுதல் நடத்தி எங்கேயோ மூலையில் மறைந்திருந்த சில சில்லறையைப் பொறுக்கி தான் அலுவலகத்துக்குச் செல்லும் பஸ்ஸுக்கு கொடுத்து ஒருவாறு அலுவலகம் வந்து சேர்ந்தார்.

அலுவலகத்தில் உள்ள தனது சகபாட்டினரிடம் விடயத்தை அவர் சொன்னபோது எல்லோரும் மிகவும் அனுதாபப்பட்டுக் கொண்டனர். ஒரு சிலர் ஆர்வமிகுதியால், 'அப்ப மனிசி திட்டலையோ' என்று கேட்ட போது அவர் சொன்ன பதில் அனைவரையும் அதிர்ச்சியடையவும் கோபப்படவும் அதேவேளை சிரிக்கவும் வைத்தது. அவர் சொன்னது இதுதான்.

நான் மனிசிக்கு விடயத்தைச் சொன்னபோது மனிசியும் அதிர்ச்சியடைந்தார். பின்னர் அவர் என்னுடன் தொலைபேசியில் பேசிக்கொண்டே அலுவலகத்துக்கு புறப்பட முன்னர் கழற்றிப்போட்ட என்னுடைய ஜீன்ஸை சோதனையிட்டபோது அதற்குள் எனது பேர்ஸ் பத்திரமாக இருந்துள்ளது. இதை அவர் எனக்கு சொன்னபோது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அதனை பஸ்ஸில் இருந்தவர்களுக்கு சொன்னால் என்னைத் திட்டிவிடுவார்களோ என்ற பயத்தில் சத்தம் போடாமல் இறங்கிவிட்டேன்.

**நரேஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள் பொதிந்த அடைமொழிகள்

மா.சின்னு

தமிழில் அடைமொழி என்ற ஒன்று உண்டு. இந்த அடைமொழிகளைக் கொண்டு ஒருவரின் அல்லது ஒரு பொருளின் சிறப்பு,சிறப்பின்மைகளை அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக 'கோல்' என்ற சொல்லுடன் 'செம்மை' என்ற பண்பினைச் சேர்ந்து 'செங்கோல்' என்றால் அதன் உயர்வு தெரிகிறது. கோலுக்குச் செம்மை அடைமொழி. கொடுமை என்ற சொல்லை அடைமொழியாகச் சேர்த்துக் கொடுங்கோல் என்றால் அதன் சிறப்பின்மை வெளிப்படுகிறது. புலவர்கள் அடைமொழிகளை ஏதேனும் ஒரு காரணம் கருதியே பயன்படுத்தினர். வெற்று அலங்காரத்திற்காகப் பயன்படுத்தவில்லை. சங்கப் புலவர்களில் ஒருவராகிய வெள்ளைக்குடி நாகனார் புறநானூறு 35 ஆம் பாடலில் ,

**நளியிரு முந்நீர் ஏணியாக**
**வளியிடை வழங்கா வானம் சூடிய**
**மணிதிணி கிடக்கை தண்டமிழ்க் கிழவர்**
**முரசு முழங்கு தானை மூவர்...**

'நீர் செறிந்த பெரிய கடல் எல்லையாகக் காற்று வழங்காத வானத்தைச் சூடிய மண் செறிந்த உலகத்தின் கண் குளிர்ந்த தமிழ் நாட்டிற்கு உரியராகிய முரசு ஒலிக்கும் படையினை உடைய மூவேந்தர்' என்றார்.

வானத்தினை 'வளியிடை வழங்கா வானம்' என்று அடைமொழி தந்து குறிப்பிடுகிறார். 'வளியிடை வழங்கா' அதாவது, 'காற்று வழங்கா' என்று அடைமொழி தருகிறார். இந்த அடைமொழி வானத்திற்கும் மிகப் பொருத்தமாகவுள்ளது. சுமார் எட்டு கி.மீ.க்கு மேல் ஆகாயத்தில் காற்று இல்லை என அறிவியல் வல்லுநர் கூறுவதுடன், இவ்வடைமொழி ஒத்துவரக் காண்கிறோம். 'வளியிடை வழங்கா வானம்' என்று அடைமொழியுடன் வெள்ளைக்குடி நாகனார், வானத்தைக் குறிப்பிட்டுப் பாடியது கற்பனை கலவாத உண்மையாகிப் புலவரின் வானவியல் அறிவைப் புலப்படுத்திவிட்டது.

'விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்' (புறநா-53) என்னும் அருமையான தொடரைத் தந்த பொருந்தில் இளங்கீரனார் என்னும் புலவர்,

**கபிலரை செறுத்த செய்யுட்**
**செய்செந் நாவின்**
**வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன் (புறநா-53-11,12)**

என்று பல அடைமொழிகளை அடுக்கி புகழின் உச்சிக்கே கொண்டு சென்றார். இவ்விரு அடிகளுக்கும் விளக்கம் தரும் பழைய உரையாசிரியர், 'பல பொருளையும் அடக்கிய செய்யுளைச் செய்யும் செவ்விய நாவினையும் மிக்க கேள்வியையும் மிக்க புகழையும் உடைய கபிலன்' என்றெழுதினார். சொற்செறிவும் பொருட்செறிவும் தொடை நலச்செறிவும் அடக்கி இனிமைச்சுவை சொட்டச் சொட்ட பாடுந்திறனில் ஓங்கித் தமிழுலகு அளந்த உயர் புலவன் கபிலன் என்பதைக் கலித்தொகையிலும் (குறிஞ்சிக்கலி), பத்துப்பாட்டினுள் ஒன்றான குறிஞ்சிப் பாட்டிலும் கண்டு களித்துச் சுவைக்கலாம்.

தமிழர் தம் திருமண நிகழ்ச்சி முறையைத் தோழி கூற்றில் அமைத்துப் பாடும்போது திருமணத்தை முன்னின்று நடத்தும் அறிவன் (சோதிடன்) சான்றோர் இவ்விருவரையும் குறிப்பிடும் கபிலர்.

**நெறியறி செறிகுறி புரிதிரிபு**
**அறியா அறிவனை முந்துறீஇத்**
**தகைமிகு தொகைவகை அறியும்**
**சான்றவர் இனமாக...**

என்று அறிவன் சான்றோரின் புலமைத் திறத்தினைத் தம்முடைய செறுத்த செய்யுட்செய்திறன் மூலம் வெளிப்படுத்தி நம்மை வியக்க வைக்கிறார். கபிலர் பாடிய இவ்விரு அடிகளுக்குப் பொருள் கூறும் நச்சினார்க்கினியர், 'நூல்நெறியாலே அறிந்த இருவரும் ( தலைவன், தலைவி) கூடுவதற்கு ஏதுவாகிய முகூர்த்தம் வேறுபட்டுத் தப்புதலை ஒரு காலத்தும் அறியாத கணிவனை (சோதிடனை) முன்னிட்டு அழகு மிகுகின்ற தொகுத்துக் கூறுதலையும் வகுத்துக் கூறுதலையும் அறியும் சான்றவர்' என்று எழுதுகிறார். இவ்வாறு விரிந்த பொருள்தரும் வகையில் சுருங்கிய சொற்களை அமைத்துப் பாடியதால்தான் பொருந்தில் இளங்கீரனார், வேறு எந்தப் புலவரிடமும் இல்லாத தனித்திறன் கபிலரிடம் இருக்கக்கண்டு 'செறுத்த செய்யுட் செய் கபிலன்' என்று பொருள்பொதிந்த அடைமொழி தந்து பாராட்டினார்.

பெரிய திருமொழியில் திரு மங்கை யாழ் வார் இரா மனுடைய வில்லாற்றலைக் குறிப்பிடும்போது;

**'அரக்கர் தலைவன் தன்**
**வற்பார் திரள்தோள் ஐந்**
**நான்கும் துணித்த வல்வில்**
**இராமன்' (5:1-4)** என்று பாடினார்.

சீவகசிந்தாமணி பாடிய திருத்தக்கதேவரும் கனகமாலையார் இலம்பகத்தில் வரும் விசயன் என்ற பாத்திரத்தின் மூலம் இராமனைப் புகழ்வார். சீவகன் ஏமமாபுரத்துச் சோலையில் இருந்தபோது இங்குவந்த ஏமமாபுரத்தரசன் மகன் விசயன் என்பான் சீவகனை அணுகி, 'தான் அம்பெய்தி வீழ்த்த முடியாத மாங்கனியை விழச் செய்து தருமாறு வேண்டினான். சீவகன் உடனே ஓர் அம்பெய்து அந்த மாங்கனி தன் கையில் வந்து விழச் செய்தான். இச்செயல் கண்ட விசயன் வியந்து,

**'மராமரம் ஏழும் எய்த**
**வாங்குவில் தடக்கை வல்**
**வில் இராமனை வல்லன்**
**என்பது இசையலால் கண்**
**டதில்லை'.**

அதாவது, வில்லினை வளைத்த கையினை உடைய இராமன் மராமரம் ஏழும் ஊடுருவ எய்த வலிய விற்றொழிலை வல்லன் என்பது வார்த்தையல்லது கண்ணினால் கண்டதில்லை. இப்போது கண்டேன்' எனக் கூறியதாகப் பாடுமிடத்து 'வல்வில் இராமன்' என்ற அடைமொழியுடன் இராமனை திருத்தக்கதேவர் சிறப்பித்தார். வல்வில் சீவகனை இராமனாகக் காட்டுகிறார் தேவர். 'வல்வில் இராமன்' என்று ஆழ்வார் கொடுத்த அடைமொழி பொருள் பொதிந்தது. அதனால், தேவரும் வழிமொழிந்தார். இவ்வாறு பண்டைய இலக்கியங்களில் புலவர்கள் பொருளொடு பொருந்திய அடைமொழிகளையே பயன்படுத்தினர். அதனால், பலநூறு ஆண்டுகளானாலும் பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று பொருள் பொதிந்த இவ் அடைமொழிகள் நிலைத்து நிற்கின்றன. இன்று போல் வெற்று அடைமொழி தந்து புகழ்வதும் அதனை ஏற்று மகிழ்வதும் அன்று இல்லை. பொருள் பொதிந்த அடைமொழிகளே என்றும் நிலைக்கும்.

இலக்கிய சுவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீசல் இயந்திரத்தின் கதை

ஜேர்மனியப் பொறியியலாளரான ருடால்ப் டீசல்தான், அழுத்தப்பட்ட பற்ற வைப்பு உள்ளெரி டீசல் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். எனவே அந்த, இயந்திரத்துக்கு 'டீசல் என்ஜின்' என்றும், அதற்கான எரிபொருளுக்கு 'டீசல் எண்ணையை' என்றும் அவர் பெயர் சூட்டப்பட்டது.

டீசல் இயந்திரத்தின் உட்பகுதியில், காற்றையும் எரிபொருளையும் பற்ற வைப்பதற்கு 'ஸ்பார்க் பிளக்' போன்ற வெளி அமைப்புத் தேவையில்லை. டீசல் இயந்திரத்தின் 'சிலிண்டருக்குள்' உள்ள காற்று மிகுந்த அழுத்தத்துக்கு உட்படுத்தப்படுகிறது. அதனால் சூடாகும் எரிபொருள், காற்றுடன் தொடர்பு ஏற்படும் போது தானாகவே பற்றிக் கொள்கிறது. அதனால், அதற்கு முன் வாகனங்களில் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களை விட டீசல் இயந்திரம் சிறியதாகவும் எடை குறைவானதாகவும் இருந்தது. அதற்குக் கூடுதலான எரிபொருள் ஆதாரமும் தேவைப்படவில்லை.

ருடால்ப் டீசல் தனது இயந்திரத்துக்கு 1892 ஆம் ஆண்டில் காப்புரிமை பெற்றார். 1893 ஆம் ஆண்டில் அது மாதிரியான இயந்திரம் ஒன்றை டீசல் பரிசோதித்துக் கொண்டிருந்த போது அது வெடித்தது. அதில் டீசல் படுகாயமடைந்தார். அதன் விளைவாக தொடர்ந்து தனது இயந்திரத்தைப் பாதுகாப்பானதாக உருவாக்கும் முயற்ச்சியில ஈடுபட்ட டீசல் அதை 1897 ஆம் ஆண்டு செம்மையாக்கினார்.

டீசல் இயந்திரத்தைக் கண்டுபிடித்ததன் விளைவாக ருடால்ப் டீசல் பெரும் பணக்காரனார். காரணம் அவரது டீசல் இயந்திரம், போக்குவரத்து வாகனங்களில் மட்டுமல்லாமல், பல்வேறு தொழிற்சாலை இயந்திரங்களிலும் பயன்படுத்தப்பட்டது. அது எரிபொருள் திறன் மிக்கதாகவும் அதிகளவு நிலக்கரி தேவைப்படாததாகவும் இருந்ததால் நிறையப் பணத்தை சேமித்துக் கொடுத்தது.

ஒருமுறை லண்டனுக்குச் சென்ற ருடால்ப் டீசல் அங்கு மர்மமான முறையில் இறந்தார். அவரது மாணத்தில் நிலக்கரி உற்பத்தியாளர்களுக்குத் தொடர்பு இருக்கக்கூடும் என்று பலரும் சந்தேகித்தனர்.

# குறுக்கெழுத்துப்போட்டி - 34

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ♠ | 4 | 5 |
| 6 | 7 | 8 | ♠ | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | ♠ | ♠ |
| ♠ | ♠ | 15 | 16 | ♠ | 17 |
| 18 | 19 | ♠ | 20 | 21 | 22 |
| 23 | ♠ | 24 | 25 | 26 | ♠ |

**இடமிருந்து வலம்**

1. கடும் காற்றை இப்படியும் சொல்வர்
4. விஜய் நடித்த படம்
6. சக்தி என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
9. 'உண்' என்றும் சொல்லலாம் (திரும்பியுள்ளது)
11. பரம்பரை (குழம்பியுள்ளது)
15. இது வந்தால் பத்தும் பறந்துபோகும்
18. கூட்டம் நடத்த இது தேவை
20. பெண்களின் கண்களுக்கு ஒப்பிடும் மீன்வகை (குழம்பியுள்ளது)
24. ஒரு கிழமையை இப்படி சொல்வர் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. இடம்
2. அச்சம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
3. பூலான்தேவி மறைந்திருந்த பள்ளத்தாக்கு (குழம்பியுள்ளது)
4. குழந்தை என்றும் சொல்லலாம் (தலைகீழ்)
5. சமாதானத்துக்கு அடையாளமான பறவை (தலைகீழ்)
14. சிலரை மயக்க இது செய்வார்கள்
17. இதில் 64 வகை உண்டு
18. அறிவாளி
21. சில நட்சத்திரங்களுக்கு இது உண்டு (தலைகீழ்)

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

## குறுக்கெழுத்துப்போட்டி - 32 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. கண்ணதாசன் | 1. கடிவாளம் |
| 7. மடி | 2. மண் |
| 9. மடை | 4. தாமரை |
| 12. பாறை | 5. சடை |
| 15. நடிகை | 12. பாகை |
| 18. கோடி | 14. இடி |
| 22. தை | 18. கோலம் |
| 23. நாமம் | |

குறுக்கெழுத்துப்போட்டி இல. 32இல் இடமிருந்து வலமாக வரும் 15ஆம் இலக்க கேள்வி தவறானது. எனவே இம்முறை அதிர்ஷ்டசாலிகளை தேர்ந்தெடுக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 64, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...




## தெரிந்துகொள்ளுங்கள்!

* மனித உடம்பிலுள்ள மிகப் பெரிய தசை-இதயத் தசை.
* பெண்களுக்கு வாக்குரிமை அளித்த முதல் நாடு நியூஸிலாந்து (1893 ஆம் ஆண்டு).
* இந்தியாவில் முதன் முதலில் தீயணைப்புப் படை மும்பையில் 1885 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
* சீனாவின் மிகப்பெரிய நகரம் ஷாங்காய்.
* சென்னை விமான நிலையம் 1945 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
* உலகிலேயே முதல் கண்வங்கி அமெரிக்காவில் (நியூயோர்க்) தொடங்கப்பட்டது.
* பொதுவாகவே மனித இனம் தோன்றியதற்கு அடிப்படை ஆதாரமே நீர்நிலையாகத்தான் இருந்துள்ளது. பல்வேறு நாகரிகங்கள் ஆற்றங்கரையோரங்களில்தான் உருவாகியுள்ளது.

## விடுகதை

1. காத வழி போனாலும் கைகடுக்காச் சுமை. அது என்ன சுமை?
2. எருக்கம் இலை பழுப்பதேன், எருமைக் கன்று சாவதேன். அது என்ன?
3. வெளியே வெள்ளிக்கட்டி; உள்ளே தங்கக் கட்டி. அது என்ன?
4. கிளிகள் மூன்று நிறம்; மூன்றும் கூட்டுக்குள்ளே போனால் ஒரே நிறம். அது என்ன?
5. நீரிலே பிறந்து, நீரிலே அழியும். அது என்ன?
6. எங்க தம்பி வித்துவான்; காதைத் திருகினால் கத்துவான். அவன் யார்?
7. மண்ணால் செய்த பானை இல்லை; கையால் ஓட்டைப் போடவில்லை. துடைக்கத் துடைக்கக் கசியுது. அது என்ன?
8. உயிரில்லாப் பறவை ஊர் ஊராகப் பறக்கும். அது என்ன?
9. பூ உண்டு, வாசம் இல்லை; இல்லை உண்டு, கிளை இல்லை. அது என்ன?
10. ஓராண்டு உழுதவனுக்கு ஒருவாரம் அறுவடையாம். அது என்ன?

1. வயிற்றுப் பிள்ளை
2. பால் இல்லாமல்
3. முட்டை
4. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு
5. உப்பு
6. ரேடியோ
7. வியர்வை
8. கடிதம்
9. வாழைமரம்
10. தேர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாம்புக்கடிக்கு ஒரு இணையத்தளம்

உலகளவில் பாம்புக் கடியால் பலர் இறந்துவரும் நிலையில், அப்படியான இறப்புகளைக் குறைக்கும் நோக்கிலும் பாம்புக் கடியின் விஷத்தால் கை,கால்கள் பாதிக்கப்பட்டுச் செயற்பட முடியாத நிலையில் இருப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கிலும் உலக சுகாதார நிறுவனம் ஒரு இணையத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் சுமார் 25 இலட்சம் பேர் பாம்புக் கடிக்கு ஆளாகிறார்கள். அவற்றில் சுமார் 2,500 பேர் இறக்கவும் நேரிடுகிறது என்று உலக சுகாதார நிறுவனம் கணக்கிட்டுள்ளது.

கடுமையான விஷம் கொண்ட பல பாம்புகள் மேலோட்டமாகப் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருக்கும். ஆனால், எல்லாப் பாம்புகளுக்கும் ஒரே மாதிரியான விஷமுறிவு மருந்துகள் செயற்படாது. இந்த மாதிரியான சிக்கலான நேரங்களில் பாம்புக் கடிகள் தொடர்பாக உலக சுகாதார நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இந்த இணையத்தளம் உதவியாக இருக்கும். பல நேரங்களில் இந்த இணையத்தளம் உயிர்காக்கவும் உதவும். இந்த இணையத்தளத்தில் உலகிலுள்ள அனைத்து விஷப் பாம்புகள் குறித்த தகவல்களும் புகைப்படங்களுடன் இடம்பெற்றுள்ளன.

எந்தப் பாம்புகள் எந்த நாட்டில் இருக்கின்றன. அவை கடித்தால் என்ன வகையான விஷமுறிவு மருந்துகள் தேவைப்படும் என்பது தொடர்பான அறிவுரைகளும் அந்த இணையத்தளத்தில் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. பாம்புக்கடி ஏற்பட்டவுடன் உடனடியாகச் சரியான விஷமுறிவு மருந்துகளை எடுத்துக் கொண்டால் அப்படியான கடிகளினால் ஏற்படும் மரணங்கள் மற்றும் கடுமையான உடல்நலப் பாதிப்புகளைப் பெருமளவில் குறைக்க முடியும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

பொதுமக்கள் மற்றும் மருத்துவர்களுக்கு இந்த இணையத்தளம் உதவியாக இருக்கும் என்பதற்கு அப்பாற்பட்டு அரசுகளுக்கும் இது உதவியாக இருக்கும் என்று அந்த பன்னாட்டு அமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்த இணையத்தளத்திலுள்ள தகவல்களின் அடிப்படையில் தமது நாடுகளில் எந்த வகையான விஷப் பாம்புகள் இருக்கின்றன. அவற்றுக்கு என்ன வகையான விஷமுறிவு வகைகள் தேவையென்பதை அறிந்து அந்நாட்டு அரசுகள் அந்த மருந்துகளைப் போதியளவில் சேமித்து வைத்துக்கொள்ள முடியும் என அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.


உலகின் பல பாகங்களில் பாம்புக்கடியால் ஏற்படும் பிரச்சினைகள் சுகாதாரத் துறையால் புறக்கணிக்கப்பட்டதொன்றாகவே இருக்கின்றது என்றும் உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டுகிறது.

பல நாடுகளில் தரமற்ற மற்றும் சரியான நோய் எதிர்ப்பு மருந்துகள் இல்லாது இருக்கும் நிலையில், சுகாதாரப் பணியாளர்கள் அதன் செயற்திறனை நம்பாத நிலையும் உள்ளது எனவும் அந்த அமைப்புக் கூறுகிறது.


பல நாடுகளில் பாம்புக் கடிகள் குறித்துச் சரியான புள்ளிவிபரங்கள் இல்லாத நிலையும் காணப்படுகிறது. இதன் காரணமாகத் தேவையான அளவுக்கு விஷமுறிவு மருந்துகளை அந்தந்த நாடுகள் திட்டமிட்டு வாங்க முடியாத நிலையேற்படுகிறதெனவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால் பல சந்தர்ப்பங்களில் விஷமுறிவு மருந்துகளைத் தயாரிப்பவர்கள் அதன் விலையை ஏற்றுவதற்கும் வழிவகுக்கிறது. சில நேரங்களில் மருந்துத் தயாரிப்பையே அந்த நிறுவனங்கள் நிறுத்தியும் விடுகின்றன.

இந்தப் பிரச்சினைகளால் ஆபிரிக்கா மற்றும் ஆசியப் பகுதிகளுக்கான விஷமுறிவு மருந்துகளின் விநியோகத்தையே பாதிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது என்றும் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. பாம்புக் கடியால் பெரிதும் ஆளாவது கிராமப்புறங்களில் இருக்கும் ஏழை விவசாயிகளும் பெண்களும் சிறார்களுமே என்றும் அந்த நிறுவனம் கூறுகிறது.

இப்படியான மக்களுக்கு இணைய வசதியோ அல்லது கௌரவமான மருத்துவ வசதிகளோ அல்லது அவர்களை காப்பாற்றும் விஷமுறிவு மருந்துகளோ கிடைக்காத நிலையும் உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கமான உலக சுகாதார நிறுவனம் கவலை வெளியிட்டுள்ளது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அஜித்தின் உயர்ந்த உள்ளம்

அதிக படங்களில் ஏன் நடிப்பதில்லை என்று பிரபல வார இதழொன்று அஜித்திடம் கேட்டதற்கு அவரளித்த பதில், குப்பையாக படங்கள் தந்து ரசிகர்களை ஏமாற்றுவதைவிட வீட்டில் சும்மா இருக்கலாம். பேச்சில் மட்டுமன்றி நடைமுறையிலும் இந்த திறந்த மனதை உருக்குலையாமல் வைத்திருக்கிறார் அஜித்.

அஜித்தின் கடைசிப்படம் அசல். சரண் இயக்கிய இந்தப் படத்தை சிவாஜி பிலிம்ஸ் தயாரித்திருந்தது. படத்தின் ஆரம்பம் எல்லாம் நன்றாகவே இருந்தது. ஆனால் பினிஷிங்...? பாக்ஸ் ஆஃபிஸில் படம் பப்படம். தயாரிப்பாளர் முதற்கொண்டு அனைவருக்கும் நஷ்டம். சமீபத்தில் பிரபுவை தொடர்பு கொண்ட அஜித் மீண்டும் சிவாஜி பிலிம்ஸுக்கு கால்ஷீட் தர தனது சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறார். அசலுக்கு வாங்கியதை விட மிகக் குறைந்த சம்பளமே போதும் என்று அவர் தெரிவித்ததாக தெரிகிறது. தயாநிதி அழகிரியின் தயாரிப்பில் கௌதம் படத்தை முடித்த பிறகு சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கும் படத்தில் அஜித் நடிப்பார் என அவருக்கு நெருக்கமான வட்டாரம் தெரிவிக்கிறது.

## மலையாளத்தில் பிஸி

யாரடி நீ மோகினி, வெண்ணிலா கபடிக் குழு, ஈரம் உள்ளிட்ட பல படங்களில் அழகு தேவதையாக வலம் வந்த சரண்யா மோகனை தற்போது விளம்பரங்களில் மட்டுமே அதிகமாக பார்க்க முடிகிறது. இது பற்றி சரண்யாவிடம் கேட்டதற்கு 'தமிழில் சினிமா வாய்ப்புகள் இல்லை' என்பது உண்மை தான். ஆனால் மலையாளத்தில் பிஸியாக இருக்கிறேன். தமிழில் கிராமத்துப் படங்களில் மட்டுமே நடிக்க அழைக்கிறார்கள். தொடர்ந்து கிராமத்துப் படங்களை செய்ய எனக்கு ஆர்வமில்லை. அதனால் தான் விளம்பரங்களில் அதிகமாக நடிக்கிறேன் என்கிறார்.



# Saturday சினிமா

சமீபத்தில் திரைக்கு வந்து வெற்றிபெற்ற ஒரு படத்தில் கேரளத்து அழகியாக நடித்தார். அந்த மூன்றெழுத்து நடிகை அவருடைய பூர்வீகமும் கேரளா தான் அதனால் சம்பாதிக்கிற பணத்தில் பெரும்பகுதியை சொந்த ஊரில் முதலீடு செய்து இருக்கிறார். அவருக்கு சொந்தமாக கேரளாவில் நிறைய தோட்டங்கள் உள்ளன. இந்த தோட்டங்களில் வாழ கொடுத்து வைத்தவர் யாரோ?

## பாலா படத்தில் சூர்யா

விஷால்-ஆர்யாவை வைத்து பாலா இயக்கும் அவன் இவன் படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் சூர்யா. கல்பாத்தி அகோரம் தயாரிக்கும் அவன் இவன் படத்தின் படப்பிடிப்பு படுவேகமாக நடந்து வருகிறது. அடுத்த சில மாதங்களுக்குள் படப்பிடிப்பை முடித்து வெளியீட்டுக்குத் தயார்படுத்திக் கொள்வதாக பாலா தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளதால் தயாரிப்பாளர் மிகவும் உற்சாகமாக உள்ளார். இந்த நிலையில் அவரை உற்சாகப்படுத்தும் இன்னொரு விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார் பாலா. இந்தப் படத்தில் நடிகர் சூர்யா கௌரவ வேடத்தில் நடிக்கிறார் என்பதே அது. உண்மையில் அவன் இவன் படத்தில் சூர்யாவையும் அவரது தம்பி கார்த்தியையும் நடிக்க வைக்கத்தான் பாலா திட்டமிட்டிருந்தார். இது குறித்து அவர்கள் இருவரையும் அழைத்துப் பேசியபோது, கால்ஷீட் பிரச்சினையைக் காட்டி நடிக்க முடியாத சூழலை விளக்கினார்களாம். இப்போது படத்தின்ர இறுதிக்கட்ட காட்சியில் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்குமாறு சூர்யாவிடம் சொன்னாராம் பாலா. சில தினங்கள் மட்டுமே கால்ஷீட் தேவைப்பட்டதால் உடனே ஒப்புக்கொண்டாராம் சூர்யா.




கஜோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

220510-1.indd 12
Process Cyan Process Magenta Process Yellow

# வாய்ப்புகள் தானாக வந்தன—லேகா



பொலிவூட் படங்களில் முழுக்க முழுக்க நடிக்க வேண்டும் என நான் அவசரம் காட்டவில்லை என்று கூறு கிறார் நடிகை லேகா.வாஷிங்டன் ரி.வி.யில் தொகுப்பாளினியாக இருந்து நடிகையானவர் லேகா. தமிழில் சிம்புவுடன் கெட்டவன் படத்தில் நடிப்பதாக இருந்தது. பின்னர் லேகாவை கைவிட்டு விட்டார் சிம்பு. இதையடுத்து ஜெயம் கொண்டான் படத்தில் நடித்தார் லேகா. தற்போது இந்தியிலும் நுழைந்துள்ளார். லேகா நடித்துள்ள இந்திப் படமான பீட்டர் காயா காம் சே படத்தில் கவர்ச்சியில் பின்னி எடுத்துள்ளாராம். அதேபோல தெலுங்கிலும் ஒரு படத்தை முடித்துள்ளார். இனி இந்தியில் தான் லேகா தீவிர கவனம் செலுத்தப் போவதாகக் கூறப்படுகிறது. ஆனால் அதை மறுக்கிறார் லேகா. இது குறித்து அவர் கூறுகையில்; வாய்ப்புகள் தானாக வந்தன. எனது முதல் இந்திப் படம் குறித்து பெருமிதமாக உள்ளது. பீட்டர் காயா காம் சே முழுக்க முழுக்க நகைச்சுவைப் படம். வயிறு வலிக்க சிரிக்கலாம்.அதேபோல கன்னடத்திலும் ஒரு படத்தை முடித்துள்ளேன். அதில் லோகேஷுடன் இணைந்து நடித்துள்ளேன். இது அருமையான காதல் கதை.தென்னிந்தியத் திரையுலகம் மிகப்பெரியது. நிறைய படங்கள் இங்கு தான் தயாரிக்கப்படுகின்றன. எனவே பொலிவூட்டில் தீவிரமாக நடிக்க நான் அவசரப்படவில்லை. துடிக்கவில்லை. மாறாக நல்ல வாய்ப்புகள் வந்தால் நிச்சயம் நடிப்பேன். எனக்கு மொழி ஒரு பிரச்சினை இல்லை. அனைத்துப் படங்களிலும் நடிக்கவே ஆர்வமாக உள்ளேன் என்கிறார் லேகா. மும்பைப் பெண்ணான லேகா படிப்புக்காக சென்னைக்கு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது மீண்டும் மும்பைக்கே அவர் இடம் பெயருகிறார். அகமதாபாத்தில் எனது பிஜி டிகிரியை முடித்தவுடன் நான் கற்சிலைகளை வடிப்பதில் இறங்கி விட்டேன். பின்னர் இயக்குநராவதற்கான படிப்பை முடித்தேன். ஆனால் இப்போது நடிகையாகி விட்டேன் என்கிறார் சிரித்தபடி.


ராவணன்-விக்ரம், ப்ரியாமணி

## மருமகனை பாராட்டிய ரஜினி

சமீபத்தில் தனுஷுக்கு வாழ்த்துத் தெரிவித்தார் ரஜினி. எதற்காக இந்த வாழ்த்து? பல படுதோல்விகளைக் கொடுத்தாலும் பாரதிராஜா என்றால் பரபரக்கத்தான் செய்கிறது. தமிழ் சினிமா. அவரது இயக்கத்தில் நடிக்க எல்லா நடிகர்களுக்கும் விருப்பம் உள்ளது. இந்நிலையில் அடுத்து இயக்கப்போகும் தென்கிழக்குச் சீமையிலே, குற்றப்பரம்பரை இரண்டும் தனது கனவுப் படங்கள் என அவர் அறிவித்ததால் அதில் நடிக்கும் அதிர்ஷ்டம் யாருக்கு அமையும் என கோடம்பாக்கமே உற்று கவனித்து வந்தது. இந்நிலையில் தனுஷை தனது அலுவலகத்துக்கு வரவழைத்து கதை சொன்னார் பாரதிராஜா. கதையிலும் பாரதிராஜாவின் அழைப்பிலும் உருகிப்போன தனுஷ் உடனே ஓகே சொல்லியிருக்கிறார். இந்தத் தகவலை அவர் ரஜினியிடம் பகிர்ந்து கொண்டபோது நல்ல முடிவு கண்டிப்பாக நன்றாக வரும் என வாழ்த்தியிருக்கிறார்.

கேரளாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மலையாள கதாநாயகிகளில் கவர்ச்சியாக நடிப்பவர்களே முன்னணி இடத்தை தக்கவைத்துக் கொள்கிறார்கள் என்ற உண்மையை மிகத் தாமதமாக புரிந்துகொண்டார்கள் 2 மலையாள நாயகிகள். அவர்களில் ஒருவர் மூன்றெழுத்து 'பா' நடிகை . இன்னொருவர் பெயரில் 'ரம்' இருக்கிறது. இவர்கள் இருவரும் இப்போது போட்டி போட்டு கவர்ச்சி காட்ட முடிவு செய்து இருக்கிறார்கள்.அதன் முதல்கட்டமாக தங்களின் கவச்சி தோற்றங்களை பரவவிடுகிறார்கள்.

கபடி படத்தில் அறிமுகமான மூன்றெழுத்து நடிகருக்கும் அவருடன் படித்த ஒரு நண்பிக்கும் இடையே காதல் இருந்து வருவதாகவும் இந்த காதலை பெற்றோர் ஏற்றுக்கொண்டு நிச்சயதார்த்தம் நடத்தி முடித்து விட்டதாகவும் ஒரு தகவல் கோடம்பாக்கம் முழுவதும் பரவியிருக்கிறது. இதுபற்றி அந்த நடிகரிடம் கேட்டால் 'அந்தத் தகவலில் உண்மை இல்லை. வெறும் வதந்தி' என்கிறார்.

## கவர்ச்சிக் களத்தில் பாவனா



இதுவரை கவர்ச்சிக்கு வாக்குப்போடாமல் இருந்து வந்த பாவனா இப்போது கவர்ச்சிக் கட்சிக்குத் தாவ முடிவு செய்துவிட்டாராம். அசல் படத்துக்குப் பின்னர் தன்னைத் தேடி நிறைய வாய்ப்புகள் வரும் என எதிர்பார்த்திருந்தார் பாவனா. இருப்பினும் எதிர்பார்த்த வாய்ப்புகள் வரவில்லை. இதனால் சற்றே சோர்ந்து போய்விட்டாராம். வாய்ப்புகள் வராமல் போனதற்கு பாவனாவும் கூட ஒரு காரணம். முன்னணி நடிகர்களோடு மட்டுமே ஜோடியாக நடிப்பேன் என்பதை ஒரு கொள்கையாக வைத்துள்ளதால் இளம் நாயகர்கள் பாவனாவைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டனர். இதனால் வருத்தம் அடைந்திருந்த பாவனா, இந்த பட வாய்ப்புப் பஞ்சத்தைப் போக்க கவர்ச்சி கோதாவில் குதிக்கத் தயாராகி விட்டார். இதற்காக கவர்ச்சிகரமான போஸ்களுடன் புதிய ஆல்பத்தை கோலிவூட்டில் உலாவ விட்டுள்ளாராம்.கவர்ச்சிக் களத்தில் குதித்து கோலிவூட்டில் தன்னை ஆணித்தரமாக நிரூபிக்க முடிவு செய்துள்ள பாவனா, விளம்பரப் படங்களிலும் நடிக்க ஆரம்பித்துள்ளாராம்.சிநேகாவைப் போல திரைப்படங்களோடு விளம்பரங்களிலும் விறுவிறுப்பாக நடிக்கப் போகிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

320510-1.indd · 13
Process Cyan Process Magenta Process Yellow

# போத்தலில் அனுப்பிய செய்திக்கு 'ஃபேஸ்புக்'கில் பதில் வந்தது

இந்து மதத்தின் படி இது கலியுகம். ஆனால், இன்டெர்நெட்டைப் பொறுத்தவரை நடப்பு காலத்தை இ-மெயில் யுகம், டிவிட்டர் யுகம், வலைப்பின்னல் அல்லது ஃபேஸ்புக் யுகம் என்று எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம்.

ஃபேஸ்புக் யுகம் என்று சொல்வதற்கான காரணங்களை எளிதாகவே புரிந்துகொள்ளலாம்.

ஒரு காலத்தில் இமெயில் முகவரி இருப்பது எப்படி இன்றியமையாததாக கருதப்பட்டதோ அதேபோல் இன்று வலைப்பின்னல் தளமான ஃபேஸ்புக்கில் ஒருவருக்கென சொந்தமான பக்கம் இருப்பது இயல்பானதாக கருதப்படுகிறது.

ஃபேஸ்புக் பக்கம் மூலம் தகவல்களை பகிர்ந்துகொள்வது சுலபமாக இருப்பதோடு, நண்பர்களைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் ஃபேஸ்புக்கில் நுழைவதே போதுமானதாக இருக்கிறது.

ஃபேஸ்புக் பக்கத்தின் மூலம் சமயங்களில் ஒருவரது ஜாதகத்தையே தெரிந்துகொண்டுவிட முடியும். யாரையாவது தொடர்புகொள்ள வேண்டும் என்றால் இப்போது தொலைபேசி எண்ணையோ ஏன் இமெயில் முகவரியையோ கூட பலரும் தேடுவதில்லை. ஃபேஸ்புக் பக்கம் இருக்கிறதா என்றே பார்க்கின்றனர்.



லோரனே யேட்ஸ்

இப்படி ஃபேஸ்புக் பக்கம் மூலம் பெல்ஜியம் மனிதர் ஒருவருக்கு ஆச்சர்யமான அனுபவம் நிகழ்ந்துள்ளது. 33 வருடங்களுக்கு முன் அவர் அனுப்பிய செய்திக்கான பதில் ஃபேஸ்புக் மூலம் கிடைத்திருக்கிறது. அவரே கூட அந்தச் செய்தியை மறந்துவிட்ட நிலையில் இத்தனை ஆண்டுகளுக்குப் பின் யாரோ ஒரு பெண்மணி பதில் அளித்து வியப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அந்த ஆச்சர்யத்தின் பின்னே இருப்பதும் ஒரு புதிரான சங்கதி தான். போத்தலில் அனுப்பும் செய்தி பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். புறா காலில் செய்தியை அனுப்பி வைப்பது முதல் தபால் தந்தி, இமெயில் என மனிதகுலம் எத்தனையோ தகவல் தொடர்பு வழிகளை கையாண்டு இருக்கிறது.

இவற்றுக்கு நடுவே கொஞ்சம் விநோதமான தகவல் தொடர்பும் பழக்கத்தில் இருக்கிறது. இதனை பரவலானது என்றோ பிரபலமானது என்றோ சொல்ல முடியாது. ஆனால், சுவாரஸ்யமானது. போத்தலில் செய்தியை எழுதி கடலில் வீசி எறிந்துவிட்டு எப்போதாவது யாராவது அதனை பார்த்து தொடர்பு கொள்கின்றனரா என்று காத்திருப்பது தான் இந்த தகவல் தொடர்பு முறை. இந்த செய்தி பார்க்கப்படும் என்பதற்கோ பார்க்கப்பட்டாலும் பதில் வரும் என்பதற்கோ எந்த உத்தரவாதமும் இல்லை.

உண்மையில் இந்த நிச்சயமற்ற தன்மையே இதில் உள்ள சுவாரஸ்யம். அந்த வகையில் இது ஒரு புதிர் கலந்த விளையாட்டு. இந்த பழக்கத்தின் ரிஷி மூலம், நதி மூலம் பற்றி தெரியவில்லை. இதனை அடிப்படையாக கொண்டு அழகான படங்கள் வந்துள்ளன. கிட்டத்தட்ட 33 ஆண்டுகளுக்கு முன் ஒலிவர் வான்டேவல்லே என்னும் வாலிபருக்கு இங்கிலாந்தில் சுற்றுலா சென்றிருந்தபோது திடீரென இப்படி போத்தலில் செய்தி அனுப்ப வேண்டும் என தோன்றியிருக்கிறது.

அப்போது அவருக்கு 14 வயது. படகில் சென்று கொண்டிருந்த அவர் அந்த நேரத்தின் உந்துதலில் ஒரு காகிதத்தை கிழித்து அதில் தன்னைப் பற்றியும் தான் மேற்கொள்ளும் பயணத்தையும் குறிப்பிட்டு ஒரு செய்தி எழுதி அதனை போத்தலில் அடைத்து தண்ணீரில் வீசிவிட்டார். யாராவது அதனை பார்த்து கடிதம் எழுதுகின்றனரா பார்க்கலாம் என்பது அவரது எண்ணம். பதில் வந்தால் பயணத்தின் நினைவுச் சின்னமாக வைத்துக் கொள்ளலாம் என்று அவர் நினைத்திருக்கலாம். வராவிட்டாலும் இந்த எதிர்பார்ப்பே ஒரு சுவாரஸ்யம் என நினைத்திருக்கலாம்.


எது எப்படியோ இந்தப் போத்தல் கடலில் தண்ணீரில் மூழ்கியது 1977 இல். அதன் பிறகு ஒலிவர் இந்த சம்பவத்தை மறந்தே விட்டார். இப்படி ஒரு செய்தி அனுப்பியதை அவர் மீண்டும் நினைத்து பார்த்திருக்கக் கூட வாய்ப்பில்லை. ஆனால், இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி அவரது ஃபேஸ்புக் பக்கத்தில் தொடர்புகொண்டு போத்தல் செய்தியை நினைவுபடுத்தியபோது அவர் வியந்தே போய்விட்டார். டோர்செட் நகரில் வசிக்கும் லோரனே யேட்ஸ் என்னும் பெண்மணி அந்தப் போத்தலை சமீபத்தில் கண்டெடுத்திருக்கிறார். உடனே அதற்கு பதில் அளிக்க வேண்டும் என்ற உந்துதல் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

அதில் இருந்த தபால் முகவரியை பெரிதாக எடுத்துக்கொள்ளாத யேட்ஸ் ஒலிவரின் பெயரை இன்டெர்நெட்டில் தேடி அவருடைய ஃபேஸ்புக் பக்கத்தை கண்டுபிடித்து தொடர்புகொண்டிருக்கிறார். முதலில் ஒலிவருக்கு எதுவுமே புரியவில்லை. தனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என கூறிவிட்டார். பிறகு தான் 14 வயதில் தான் மேற்கொண்ட புதிரான முயற்சி நினைவுக்கு வந்தது. இப்போது இருவரும் ஃபேஸ்புக்கில் நண்பர்களாகி விட்டனர்.

33 ஆண்டுகளுக்கு முன் எப்போதாவது கடிதம் மூலம் பதில் வந்தால் வரும் என கடலில் கலந்த செய்திக்கு இப்போது ஃபேஸ்புக் வாயிலாக பதில் வந்து இரண்டு பேர் வலை பின்னல் நண்பர்களாகி இருப்பதை என்னவென்று சொல்வது.




ஒலிவர் வான்டேவல்லே 14 வயதில் தனது தந்தையுடன்



ஒலிவர் வான்டேவல்லே தற்போது தனது மகனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார மெயிலில் இவர்...



# ரைலர் டிக்சன்

பிரிட்டனின் புதிய பிரதமராகப் பதவியேற்றிருக்கும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் டேவிட் கமரூன் கடந்த மாதம் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஒரு பாடசாலையில் மாணவர்களுடன் உரையாடிய சந்தர்ப்பத்தில் அவர் மீது முட்டையை வீசிய 16 வயது மாணவன் மன்னிப்புக் கடிதம் எழுதியிருந்தபோதிலும் கூட, அவனை பாடசாலை நிருவாகம் வெளியேற்றிவிட்டது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி பிளைமவுத்துக்கு அண்மையாக சால்ராஷ் என்ற பகுதியில் உள்ள கோர்ண்வோல் கல்லூரிக்குச் சென்றிருந்த கமரூன் மாணவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்துக் கொண்டிருந்தார். அப்போது திடீரென ரைலர் டிக்சன் என்ற மாணவன் அவர் மீது முட்டையொன்றை வீசினான். முட்டையின் சிதைவுகள் கமரூனின் வெள்ளை சேர்ட் மீதும் அவருடன் கூட நின்ற இரகசியப் பொலிஸ் அதிகாரி மீதும் பட்டுத் தெறித்தன. தன்னைச் சுதாகரித்துக் கொண்ட கமரூன் 'இது தேர்தல் பிரசாரத்தில் முதலாவது முட்டை' எனது பின்புறத்தைத் தாக்கினாலும் அது ஒரு நல்ல முட்டை அடி' என்று நகைச்சுவையாகக் கூறிச்சென்றார்.

ரைலர் டிக்சனை உடனடியாகக் கைது செய்த பொலிஸார் அவனது செயல் குறித்து முறைப்பாடு எதுவும் செய்யப்படாததால் பின்னர் விடுதலை செய்துவிட்டனர்.

பின்னர் அன்றையதினமே சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோரி டிக்சன், கமரூனுக்கும் கல்லூரி நிருவாகத்துக்கும் தனது தாயாருக்கும் முட்டைத் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் அதிகாரிக்கும் கடிதங்களை எழுதினான்.

'அன்புக்குரிய கமரூன் அவர்களே, பெரிதும் கவலைப்படுகிறேன். நான் ஒரு அற்பத்தனமான காரியத்தைச் செய்துவிட்டேன். எதிர்காலத்தில் உங்களது கொள்கைகள் தொடர்பில் எனக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்து உங்களுடன் கலந்துரையாடுவதில் சந்தோசம் காண்பேனே தவிர, முட்டை எறிய மாட்டேன்' என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மாணவனின் கடிதத்துக்குப் புதிய பிரதமரிடமிருந்து பதிலும் வந்தது. அதனைக் கண்டு அவன் அதிர்ச்சியடைந்து போனான். 'நன்றாகச் சிந்தித்த பின்னர் எழுதிய இந்த மன்னிப்புக் கடிதத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். மாணவனே, உனக்கு எனது வாழ்த்துகள்' என்று கமரூன் கூறியிருந்தார்.

பிரிட்டனில் மிகவும் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டவரிடமிருந்து மன்னிப்பு அளிக்கப்பட்டபோதிலும் கூட, இன்னமும் ரைவர் டிக்சன் கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்டவனாகவே இருக்கிறார். மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. டிக்சன் இப்போது தனது எதிர்காலம் குறித்துக் கவலை கொண்டவனாக இருக்கிறான்.

'எனது செயலுக்காக நான் வருந்துகிறேன். எனது வாழ்வை நானே பாழ்படுத்தி விட்டேன். எந்தத் தொழிலையுமே நான் தொடமுடியாமல் போகும். தொடர்ந்து முயற்சித்து எனது கல்வித் தராதரங்களைப் பெற்றுக் கொண்டு ஒரு வேலையைப் பெற முடியுமென்று நம்புகிறேன்' என்று அவன் கூறினான்.


தனது மகனின் நிலை குறித்து டிக்சனின் தாயார் டெயில் டிக்சன் கூறுகையில்;

'மகனின் எதிர்காலம் குறித்து கலந்து பேசுவதற்கு கல்லூரி அதிகாரிகளைச் சந்தித்தோம். ஆனால், அவர்கள் அவன் மீண்டும் அந்தக் கல்லூரிக்கு வரமுடியாது என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டனர்' என்று வருத்தம் தெரிவித்தார்.

'எனது மகன் தான் செய்தது தவறு என்பதை உணர்ந்துகொண்டதும் பகிரங்கமாக மன்னிப்புக் கோர விரும்பினான். அவனை கல்லூரியில் மீண்டும் அனுமதிக்க மறுக்கிறர்ர்கள். அவனது எதிர்காலம் குறித்து நாம் பெரும் கலக்கமடைந்திருக்கிறோம். 16 வயதில் சிறுவர்கள் இந்த வகையான கோணல்மாணல் காரியங்களில் ஈடுபடுவது ஒன்றும் புதிதல்ல. ஆனால், கமரூனுக்கு முட்டை வீசியது மிகவும் மடைத்தனமான செயல். முட்டை வீச்சுக்கு ஆளானவரே மன்னிப்பு அளித்த பிறகு கல்லூரி அவனை வெளியேற்றியிருப்பது ஏன் என்று எமக்குப் புரியவில்லை. இப்போது முட்டை கல்லூரி நிருவாகத்தின் முகத்தில் தான் இருக்கிறது' என்றும் தாயார் கூறியிருக்கிறார்.

ரைலர் டிக்சனை தேசிய பிரஜைகள் சேவையில் இணையுமாறு பிரதமர் கமரூன் தனது கடிதத்தில் கேட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்துயிர் பெறும் உயிரினங்கள்

பிரமாண்ட உயிரினமான டைனோசர்கள் இப்போது பூமியில் உயிருடன் இல்லை. ஆனால், ஆய்வகத்தில் டைனோசர்களை உருவாக்க முடியும் என்று ஜுராசிக் பார்க் திரைப்படத்தில் காட்டி இருப்பார்கள்.

அது வெறும் கற்பனையல்ல. நிஜத்திலும் அதுபோன்று இறந்துபோன உயிரினங்களை உருவாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

யானைகளின் முன்னோடி இனம் 'ஊல்லி மாமுத்'. தற்போதுள்ள யானைகளைவிட மிகப் பிரமாண்டமானவை மாமுத் யானைகள். பனிக் காலத்தில் வாழ்ந்த இவற்றுக்கு உடல் முழுவதும் 3 அடி நீள ரோமங்களும் மிகப்பெரிய தந்தங்களும் உண்டு. இந்த யானைகளும் டைனோசர்கள் போல கால மாற்றத்தில் அழிந்துபோய்விட்டன.

பழங்கால பொருட்கள், உயிரினங்கள் பற்றி நாம் பூமியில் புதைந்திருக்கும் படிமங்கள் மூலம் அறிந்துகொள்கிறோம். பனிப்பிரதேசத்தில் இறந்த உயிரினங்களின் படிமங்கள் நீண்ட காலத்துக்குச் சிதைவுறாமலும் கெட்டுப்போகாமலும் கிடைக்கிறது.

இப்படிக் கிடைத்த சில படிமங்களின் மூலம் ஒரு சில உயிரினங்களின் டி.என்.ஏ.யை வரையறை செய்ய முடிந்துள்ளது. அந்த டி.என்.ஏ.மாதிரியை செயற்கையாக உருவாக்கி தற்போதுள்ள உயிரினங்களில் செலுத்தி புதிய மாற்றத்துடன் பழைய உயிரினங்களைத் திரும்பவும் உயிரூட்டிக் கொண்டு வரமுடியும் என்பது விஞ்ஞான கண்டுபிடிப்பு.



இந்த முறையில் மாமுத் வகை யானைகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்கலாம் என்று கனடாவில் உள்ள மானிடோபா பல்கலைக்கழக ஆய்வாளர் கெவின் கேம்பல் கூறுகிறார்.

25 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மாமுத் யானையின் தாடைப்பகுதியில் உள்ள இரத்தக் குழாய் படிமம் பனிக் கட்டிக்கு இடையில் கெடாத நிலையில் கிடைத்துள்ளது. அதேபோல் 43 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கீரிப்பிள்ளையின் எலும்புப் படிமமும் ஏற்கனவே கிடைத்திருந்தது. இவற்றை ஆராய்ந்ததில் டி.என்.ஏ.யை வரையறை செய்ய முடிந்தது. இதன் மூலம் அதன் இரத்தத்தை மறுஉற்பத்தி செய்ய முடியும் என்று தெளிவாகி உள்ளது. இந்த தொழில்நுட்பத்துக்கு 'ஜெனிடிக் அடாப்டேசன் டெக்னிக்' என்று பெயர்.

இது தொடர்பான ஆய்வுகள் தொடர உள்ளது. இதில் வெற்றி கிடைத்தால் நமது காலத்திலும் டைனோசர்கள், மாமுத் யானைகள் போன்ற பழங்கால உயிரினங்கள் நடமாடும்!

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## மலையில் தங்கினால் உடற் பருமன் குறையும்

ஜேர்மனியின் முனிச் நகரில் உள்ள லுட்விக் மேக்சிமிலியன்ஸ் பல்கலைக்கழகத்தின் உடற்கூறியல் பிரிவு ஆராய்ச்சி டாக்டர் புளோரியன் லிபெல் தலைமையில் சமீபத்தில் ஒரு ஆய்வு நடந்தது. குண்டானவர்கள் எளிதாக இளைப்பதற்கான வழிகள் பற்றி இக்குழுவினர் ஆராய்ச்சி செய்தனர்.

இதற்காக சக குண்டு ஊழியர்கள் 20 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களது சராசரி எடை 105 கிலோ. அவர்களில் சிலர் தேர்வு செய்யப்பட்டு டயட் உடற்பயிற்சி உட்பட வழக்கமான எடை குறைப்பு முறைகளைக் கையாள கேட்டுக்கொள்ளப்பட்டனர். மீதமுள்ளவர்களை அருகில் உள்ள மலை உச்சிக்கு அழைத்துச் சென்றனர். நான்கு வாரத்துக்கு ஒருமுறை பல மணிநேரம் உயர்ந்த பகுதியில் அவர்கள் தங்க வைக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருமுறை உயரத்துக்குச் சென்று கீழே இறங்கி வந்ததும் அதிக இறாத்தல்கள் குறைந்தது தெரிந்தது.

கடல் மட்டத்தில் இருந்து உயர்ந்த பகுதிக்குச் செல்லும்போது காற்றில் மாற்றம் ஏற்படும். மெல்லிய காற்று மேலே தொடர்ந்து படுவதால் பசி குறைந்துவிடும். உடல் இயக்கம் வேகமெடுக்கும். வேலையே செய்யாமல் கலோரிகள் தானாகக் கரையும். இதனால் எடை வேகமாகக் குறையும்? என்று புளோரியன் கூறியுள்ளார்.

## வேற்றுக்கிரக வாசிகள் இருப்பது உறுதி என்கின்றனர் விஞ்ஞானிகள்

ஏலியன்ஸ் என்றழைக்கப்படும் வேற்றுக்கிரகவாசிகள் இருப்பது உறுதி. ஆனால் அவர்களை, மனிதர்கள் தொடர்பு கொள்ள முயற்சிக்கக் கூடாது என பிரபல விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் கூறியுள்ளார்.ஸ்டீபன் ஹாக்கிங் கூறியதாவது; பிரபஞ்சத்தில் 10 ஆயிரம் கோடி நட்சத்திர மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திர மண்டலத்திலும் லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. இவற்றில் பூமியில் மட்டுமே உயிரினங்கள் வாழ்கின்றன என்று கூறுவது தவறு.

என்னுடைய கணித அறிவின்படி வேற்று கிரகவாசிகள் உள்ளனர் என்பது தெரிகிறது. அவர்கள் எந்த உருவத்தில் உள்ளனர் என்பதைக் கண்டறிவது தான் சவாலான விடயம். அவர்கள் நுண்ணுயிரிகளாகவும் இருக்கலாம் புழுவாகவும் இருக்கலாம். அவற்றிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்த உருவங்களாகவும் இருக்கலாம். அவர்களுடைய வளர்ச்சி எப்படி இருக்கும் என்பதற்கு நம் உயிரினத்தின் வளர்ச்சியை உதாரணமாகக் கொள்ளலாம்.

தங்கள் கிரகத்திலுள்ள அனைத்து வளங்களையும் பயன்படுத்தி விட்டு தற்போது வேறு இடத்தில் வசிப்பதாக நான் கருதுகிறேன். அது போன்ற வேற்றுகிரகவாசிகள் மற்ற கிரகங்களுக்கு நாடோடிகள் போல நுழைந்து அவ்வுலகத்தைக் கைப்பற்றவும் தயாராக இருக்கலாம். ஆனால், அவர்கள் இவ்வுலகில் நுழைந்தால் அவர்களுக்கு அது வெற்றியாக அமைய வாய்ப்பில்லை இவ்வாறு ஸ்டீபன் ஹாக்கிங் கூறினார்.

## விலங்குகளிலும் இடது கைப்பழக்கம் உண்டு



மனிதர்களில் சிலர் இடது கைப் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.இதுபோல விலங்குகளிலும் இடது,வலது கைப் பழக்கம் இருப்பது தெரியவந்துள்ளது.

அதுவும் சில விலங்குகள் குறிப்பிட்ட சூழலில் வெவ்வெறு விதமாக செயற்படுவது விஞ்ஞானிகளையே வியப்புக்குள்ளாக்கியது.வடக்கு அயர்லாந்து நாட்டின் பெல்பாஸ் பல்கலைக்கழகம் நடத்திய இந்த ஆய்வில் தெரியவந்த சில உயிரினங்களின் வினோத கைப்பழக்கம் பற்றிய சுவாரஷ்யமான தகவல்கள் வருமாறு...

பொதுவாக பெண் விலங்குகள் வலது கைப்பழக்கம் [விலங்குளில் கை என்பது முன்னங்கால்களை குறிக்கும்] உடையவையாக இருக்கின்றன.

நாய்களில் பெண்நாய் வலது கால் பழக்கமும் ஆண்நாய் இடக்கால் பழக்கம் உடையதுமாக இருக்கிறது. நாய்கள் வலதுபக்கமாக வாலாட்டிவால் 'ரிலாக்ஸாக' இருப்பதாகவும் இடது பக்கமாக வாலாட்டினால் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருப்பதாகவும் அர்த்தமாம்.

ஹார்மோன் சுரப்பிகளே இந்த கைப் பழக்க மாற்றங்களுக்கு காரணமாக இருக்கின்றன.

மீன் இனங்களில் காணப்பட்ட விநோதம் என்னவென்றால் எதிரிகளின் தாக்குதல் அபாயத்திலிருந்து தப்பிப்பதற்கேற்ப வலது அல்லது இடது பழக்கத்தை சீராக மாற்றிக் கொள்கிறது. ஒரு வகை திமிங்கலத்தில் உணவு உண்ணும்போது மட்டும் தாடையை வலதுபுறம் சாய்க்கும் பழக்கம் காணப்படுகிறது.

பெண்பூனை ஏமாற்றும் விதத்தில் செயற்படும்போது வலதுபக்க இயக்கத்தையும் ஆண் பூனை சாதாரணமாக உட்கார்ந்திருக்கும்போது இடதுகைப் பழக்கம் உடையதாகவும் இருக்கிறது.

தங்கமீன் கொஞ்சம் விநோதமாக ஒருபுற கண் அல்லது தலையை அசைத்து எதிரிகளை மிரட்டுகிறது. ஹம்பக் திமிங்கலம் முடிவெடுத்து செயல்படும்போது தனது செதில்திமிலை வலதுபுறமாக திருப்புகிறது.ஈல் வகை மீன் கடலின் குளிர்ச்சிக்கு ஏற்ப உடலசைவை வெளிப்படுத்துகிறது.

டெனிஸ், குத்துச்சண்டை உள்ளிட்ட சில விளையாட்டுகளில் இடது கைப் பழக்கம் உடையவர்களின் கை ஓங்கி இருக்கும் என்று ஆய்வாளர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# மௌனம் வேண்டாம்...

கணேசன் கயேந்தினி
ஜெயபுரம் தெற்கு.

அன்று ஞாயிற்றுக்கிழமை சோம்பலை முறித்துக் கொண்டு விஜயின் நினைவுடன் துயில் நீங்கி எழுந்தாள் ஸ்திருகா! நேரம் நகர்ந்துகொண்டிருந்தது. ரம்மியமான அந்தக் காலைப் பொழுதை இரசித்த ஸ்ருதிக்கு-மனதில் ஒரு ஏக்கம்! அதாவது தன் காதலன் விஜய் ஆலயத்துக்கு அன்றைய தினம் வருவானா? வரமாட்டானா? என்பதுவே.

அவளுடைய மனதில் குழப்பம் ஏற்பட்ட போதிலும் விஜய் நிச்சயம் ஆலயத்திற்கு வருவான் என்ற நம்பிக்கை விதையைத் தூவிக்கொண்டு தேநீரை அருந்தினாள். அலங்கரித்து அவள் முன் வந்த அன்னையையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு ஆலயம் வந்து சேர்ந்த ஸ்ருதி, ஒரு பக்கமாகச் சைக்கிளை நிறுத்திவிட்டு ஆவலுடன் விஜயைத் தேடினாள். 'என்ன ஸ்ருதி?' என அவளது அன்னை கேட்டதும் திடுக்கிட்ட அவள் 'ஒன்றுமில்லைம்மா' என்று மழுப்பினாள்.

ஸ்ருதியின் தந்தை வீதிவிபத்து ஒன்றில் இறந்துவிட்டார். ஒரே பிள்ளையான ஸ்ருதியை அவளது தாயார் பார்வதி ஒரு குறையுமில்லாமல் வளர்த்து படிக்க வைத்து ஆசிரியராக்கினாள். அவளது தந்தை விஷ்வநாதன் இறப்பதற்கு முன்னர், விஜயை அழைத்து ஸ்ருதியைத் திருமணம் செய்து கொள்ளும்படி அன்புக்கட்டளையிட்டார். இதற்காகக் காத்திருந்த விஜய் இரட்டிப்பு மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான். இவ்விடயம் எதுவும் ஸ்ருதிக்குத் தெரியாது!

விஜயின் அழகில் மயங்கிய ஸ்ருதி தன் காதலை அவனிடம் கூறத்துடியாய்த் துடித்தாள். எனினும் சொல்வதற்குத் துணிவு வரவில்லை. அவனது அழகான விழிகள், உதட்டை மூடிய அடர்ந்த மீசை, ஏறுபோன்ற நடை என்பன ஸ்ருதியைக் கவர்ந்தன. ஸ்ருதியின் மதிமுகம், மாதுளம் மொட்டுப் போன்ற உதடு, பிரகாசமான நீலவிழிகள், அங்கமெலாம் தங்கமுலாம் பூசியது போன்ற ஒல்லியான உடல், அலை போன்ற கருங்கூந்தல் என்பன விஜயைக் கவர்ந்தன. ஒருநாள் பாடசாலை விட்டு அவள் வருகையில்;

'ஸ்ருதி! எனக்கு உங்களை ரொம்பப் பிடித்திருக்கு; உங்களுக்கு...?' எனக் கூறிய விஜய், அவள் முகத்தை ஏறிட்டான். அவனை தன் விழிகளால் விழுங்கி விடுவதைப் போன்று நோக்கிய அவள் 'மௌனத்தையே' விடையாக்கினாள்.

'ஸ்ருதி! ஞாயிற்றுக்கிழமை நான் அம்மன் கோவிலுக்கு வருவன். அப்ப உங்கள் முடிவைச் சொல்லுங்கள்' என்று விஜய் நகர்ந்து விட்டான்.



அன்றில் இருந்து ஸ்ருதியில் எண்ணற்ற மாற்றங்கள்... ஏராளம் ஆசைகளைச் சுமந்த வண்ணம் சிறகடித்துப் பறந்தாள். இவளது மாற்றங்களை அவதானித்த தாயார், 'என்னம்மா ஸ்ருதி?' என வினவ, 'ஒன்றுமில்லம்மா' என்ற ஒற்றைப் பதிலே அவளிடமிருந்து வந்தது.

காதல்சேதி சொல்ல அவர்கள் எதிர்பார்த்த ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. அவளருகே வந்த விஜய், 'என்னம்மா ஸ்ருதி! என் கேள்விக்கு உன்பதில் ஓகேயா...?' என்றான். அப்போதும் தன் காதலைச் சொல்ல விடாது அவளை நாணம் தடுத்தது. வாரங்கள் கடந்தன. ஸ்ருதிக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என விஜய் நினைத்து வேறொரு பெண்ணைக் காதலிக்கத் தொடங்கினான். அப்பெண்ணின் பெயர் மது! அழகானவள். தான் விஜயைக் காதலிக்கும் விடயத்தை ஸ்ருதியிடம் கூறினாள் மது. தன் பேதமையை நினைத்து வருந்திய ஸ்ருதி, 'காயத்தால் ஏற்படும் வலியை விட, காதலால் ஏற்படும் வலி அதிகமானது' என்பதை அப்போதுதான் புரிந்தாள். விஜயின் நினைவுடன் இறுதி வரை வாழ விரும்பினாள்.

அன்று ஆசிரியர் தின விழா பாடசாலையில் நடைபெற்றது. விஜய்,மது, ஸ்ருதி எல்லோரும் அதே பாடசாலையிலேயே பணியாற்றுபவர்கள். அழகாகப் பாடும் ஸ்ருதியை ஒரு பாடல் பாடுமாறு அன்று சக ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் வலியுறுத்தவே, ஸ்ருதி மைக்கைக் கையில் எடுத்துப் பாடத் தொடங்கினாள். அவளது கரங்கள் நடுங்கின... ஆனால், 'ஒவ்வொரு பாடலிலும்...ஒவ்வொரு சுகம் இருக்கு...' என்ற அவளது பாடலோ மதுரமாய் ஒலித்தது! அவளையுமறியாமல் கண்கள் வெள்ளத்தில் நீந்தின! அவை பரிதாபகரமாக விஜயை நோக்கின!

மறுநாள் பாடசாலை வந்த ஸ்ருதியிடம், 'நீ நேற்றுப் பாடும் போது ஏன் அழுதாய்?' என மது கேட்டாள். இவள் ஏன் கேட்கிறாள், இவளுக்குச் சொல்லி என் வேதனைத் தீருமா அல்லது விஜய் தான் கிடைப்பானா? எனச் சிந்தித்த ஸ்ருதி, 'அது ஒன்றும் இல்லடி மது! அந்தப் படத்தை நினைத்தேன்; அழுகை வந்தது' எனச் சமாளித்தாள். ஆனால், மதுவின் மனதில் ஒரு சந்தேகம். விஜயிடம் சென்று ஸ்ருதி பற்றி விசாரித்தாள். 'மதும்மா! என்மேல் உனக்கு என்ன சந்தேகம்? நான் எப்பவும் உன்னை விட்டு வேறு பெண்ணை நினைத்துப் பார்க்கவேமாட்டேம்மா... நீ தான் என் உலகம்...' என்றான் விஜய். மதுவின் சந்தேகம் அகன்றது. அவர்கள் திருமணம் புரிந்து மகிழ்வாகத் தம் வாழ்வைக் கழித்தனர். ஸ்ருதியின் வாழ்வோ மௌனமாகத் தொடர்ந்தது!

'தன் கவலைகளை' மூட்டைக் கட்டி வைத்துவிட்டு அநாதை இல்லம் ஒன்றை ஆரம்பித்து விஜயின் நினைவுடன் வாழ்ந்து வரும் ஸ்ருதி, அங்கு வாழும் குழந்தைகள் மத்தியில் தானுமொரு குழந்தையாக வாழ்கிறாள்.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## என் தோழியே

என் வாழ்வின் சந்தோசம் நீயே
சந்தோச வார்த்தை தருபவளும் நீயே!
என் வாழ்வின் மறக்க முடியாத நாளில்
உன்னை மறக்க முடியாமல் செய்தவளும் நீயே!
உன்னை தினம் தினம் நேசிக்கின்றேன்
என் உள்ளத்தால் என் உயிராய் சுவாசிக்கின்றேன்!
நீ இல்லையென்றால் நான் இல்லை
என் வாழ் நாளில் சந்தித்தவர்களில்
புனிதமானவள் நீயடி-உன்னுள்
நான் இருக்கின்றேன் என்பதை விட
என்னுள் நீ உறைந்து விட்டாய்!
இது என் நாவில் வந்ததல்ல
உள்ளம் என்ற ஒன்று சொல்ல
கையிலுள்ள என் பேனா எழுதியது!

**கா.உதயமலர்,**
**தொண்டமானாறு.**

## இமயம் உன்னைத் தொடட்டும்

புதியதும்
பழையதும்
உனக்கு வேண்டாம்
உன்னை -நீயே
புடம்
போட்டுக்கொள்
களங்களைக் கண்டு
கலங்காத
உனக்கு
வெறும் சலங்கைகள்
எதற்கு...?

நீ...
இமயமாகிப்போக
இமயத்தின் பயணங்கள்
தொடரட்டும் உன்னைத்
தொடுவதற்கு...

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**

## ரசனை

சொட்டும் மழை
சத்தமில்லா இரவு
அமைதியான அகம்
அழகான அமைவிடம்
அல்லவா?

ரசனைகள் பலவிதம்
ஆனாலும்
ரசிக்கின்ற மனமென்பது
ரசமானது...

கண்கள் கண்டு கொள்ளும்
கற்பனைகள் என்பது
கவர்ச்சியானது...

சகலருக்கும் கிடைப்ப
தில்லை
சாதகமாய்
சில உயிர்கள் மட்டும்
உணர்ந்து கொள்ளும்!

தெளிந்த மனமென்பது
தெவிட்டாத
தென்றல் காற்று...

புதிய சிந்தனைகள்
அதில்
பூக்களின் வாசம்...

உழைக்கும் கரங்கள்
என்பது
உவகையளிக்கும்
உண்மைக் கனவுகள்
அதில்
திடமான தன்னம்பிக்கை
என்பது
வர்ணஜாலங்கள்...

தியாகம் என்பது
இலட்சியவாதியின்
இதயம்
அதில் சிரமங்கள் தான்
உயிர்த்துடிப்பு...

உணர்ந்திடும்
உயிர்கள்
உருவாக்கிடும்
உதயங்களை...

**அஷ்ரபா அலிறிஷாப்,**
**அக்குறணை.**

## சமூகப் புரைசல்...

சாக்கடை வீசும் சந்தன வாசம்
சமூகம் பெறுவரமோ?-இங்கு
பூக்கடை போட்டு பன்னீர் தெளித்தால்
புரையற மணம்வருமோ?

புரட்டுத் தனமும் முரட்டுக் குணமும்
பெற்றவர் பாக்கியரோ?-ஊழல்
திருட்டுப் பணமும் திரட்டும் கனமும்
துடைப்பார் யோக்கியரோ?

காகிதக் கப்பல் கடலில் விட்டு
கஷ்டம் நீங்கிடுமோ? ஏதோ
ஆகிறதாக அசமந் திருந்தால்
அருட்தனை ஓங்கிடுமோ?

வாய்ச்சொல் வீச்சும் வசைச்சொல் பேச்சும்
வாய்த்தவர் வீரியரோ?கட்சிப்
பாய்ச்சல் போக்கும் பிறள்வாம் நே[illegible]
படைத்தவர் சீரியரோ?

பேரின வாதம் பிரிவினை மோதல்
பெருமை அளித்திடுமோ?-[illegible] ஓரினம்
என்றே ஒற்றுமை பூண்டால்
உலகம் பழித்திடுமோ?

சத்திய நெறியும் சமத்துவக் குறியும்
சார்ந்தவர் திண்ணியரோ?-இதய சுத்தியே
இல்லாச் குரணும்,பொல்லாச்
சழக்கனும் புண்ணியரோ?

அடுக்களைச் சட்டி வெறுமனே ஒட்டி
அடுப்பும் சிரித்திடுமோ?கறிபுளி
அடுக்குடன் சேர, அல்லலும் தீர
அரசியல் பரிந்திடுமோ?

புலர்ந்திடும் பொழுதில் பொருட்களின் விலை
கள்
பரவலாய்க் குறைந்திடுமோ?இல்லை
உலர்ந்திடும் வயிற்றின் உறுபசி மேலும்
உச்சமாய் நிறைந்திடுமோ?

சாத்திரம் பார்த்துத் தோத்திரம் பண்ணி
சனிதுயர் விலகிடுமோ?-கொள்கைக்
காத்திரம் இல்லாக் கட்சிகள் கூட்டால்
காரியம் நிலவிடுமோ?

நிறத்தை மாற்றும் பச்சிலை ஓணான்
நிலையினில் தலைமைகளோ?இவர்தம்
திறத்தைக்கொண்டு தூங்கிடும் சமூகம்
தேம்புதல் நிலைமைகளோ?

**ஏறாவூர் அலைக்தர்.**

## சுகமான சுமைகள்

புது வானம் புதுப் பொலிவுடன்
அதில் தினம் தினம்
இளமை காணும் இதயம்
அவளைக் காண்கையில் அவளுக்காய்
வாழவும் மரணிக்கவும் தூண்டியது
பிறப்பும் இறப்பும் புதிதல்ல பெண்ணே
புதிர் போடும் உன் பார்வை
என்னை விலகையில் மரணிப்பதும்
மறுகணமே மறுபார்வையில் உயிர்ப்பதும்
உன்னால் எனக்குக் கிடைத்த
சுகமான சுமையா...
வரமான சாபமா...

**தி.ஜூடின் சிந்துஜன்,**
**கொழும்பு-15.**

## ஏற்புரை

சின்னமலர்ப் பாதமே-என்
செல்லமொழிப் பார்வையே
என்மதிப் பாவையே-உன்னால்
ஏறுதடி போதையே

தீட்டுகிறேனுனை படமாய்-நீ
தீண்டுகிறாயெனை திடமாய்
பாடுகிறேன் இராகம் தோடி-உனை
பார்த்தவழி மூடாதோடி

நங்கையுன் மென்மையழகு-அதில்
நாணமுன் பெண்மைக்கழகு
பூவையுள் கன்னமழகு-கீழ்
பொங்குமிரு நெஞ்சமழகு.

இன்பமுனை நாடுகிறேன்-தி
னம்
எங்குமுனை தேடுகிறேன்
அங்குமிங்கும் பார்க்கி
றேன்-பின்
அல்லலுற்றுப் போகிறேன்.

உனக்கும் தெரியும்- காதல்
எனக்கும் புரியும்
சொல்ல சற்றுக் கூச்சம்- அடி
இருந்தும் இதுவே எதார்த்தம்

**வே.முல்லைத்தீபன்,**
**ஒட்டுசுட்டான்.**

## நிறைவேறுமா...?

கிழக்கு வானில் கதிரவன் தோன்ற
சேவல் கூவும் சத்தம் கேட்டு
விழித்தெழும் தொழிலாளி.....

தன்னிலை மறந்து உழைக்கும்
அவர் தம் கரத்தினில் எத்தனை
கறைகளடா...
தன் பிள்ளை வாழ்வில்
வளம் பெற தன்னை
வருத்தும் பாசம் பெரியதடா...


அவர் கொண்ட கனவு
பிள்ளைதனில் தான்
நிறைவேறுமா....?

**நு.சத்தியசீலன், கொழும்பு-15.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி,**
**கொழும்பு-15**
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினங்களின் ஆயுள் இன்னும் 300 வருடங்களே



இன்னும் 300 ஆண்டுகளில் பூமியின் வெப்பம் மிக பயங்கரமாக அதிகரித்து மனிதன் உட்பட எந்த உயிரினமும் வாழவே முடியாத நிலை ஏற்பட வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் நியூ சௌத்வேல்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் பர்டியூ பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் இணைந்து பூமியின் முந்தைய பல நூற்றாண்டு வெப்பநிலை குறித்தத் தகவல்களை பல வகைகளில் சேகரித்து ஆய்வு நடத்தினர்.

தங்கள் ஆய்வு முடிவுகளை Proceedings of the National Academy of Sciences, Australian National University academics ஆகியவற்றிடம் தாக்கல் செய்துள்ளனர்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது;

இதே விகிதத்தில் நாம் நிலக்கரி, பெட்ரோலியத்தை எரித்துப் புகையை வெளியிட்டு வந்தால் உலகின் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து, 2300 ஆம் ஆண்டில் உலகின் சராசரி வெப்பநிலை குறைந்தபட்சம் 7 டிகிரி சென்டிகிரேட் [13 பாரன்ஹீட்] அளவுக்கு அதிகரித்து விடும்.

இதனால், உலகின் சில பகுதிகளில் வெப்பநிலை மிகக் கடுமையாகி உயிர்கள் வாழவே முடியாத நிலை உருவாகும். 11 முதல் 12 டிகிரி வரை வெப்பநிலை அதிகரித்தால், உலகம் முழுவதுமே மனிதன் உட்பட எந்த உயிரினமும் தப்ப முடியாது.

இப்படிப்பட்ட ஒரு சூழல் உருவாக 50/50 வாய்ப்புள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

# பேரம் பேசாத பிரிட்டன் வாசிகள்

கத்தரிக்காய் வாங்குவதாக இருந்தாலும் பேரம்பேசி வாங்குவதுதான் நம்முடைய வழக்கமாக உள்ளது. ஆனால் பேரம் பேசுவது பிடிக்காது என்கிறார்கள் பிரிட்டன் வாசிகள். ஆம் இதனால் வாடிக்கையாளர்களுக்கு ஆண்டுகளுக்கு 17 இலட்சம் கோடி ரூபா இழப்பு ஏற்படுவதாக ஒரு ஆய்வு கூறுகிறது.


மினிசூப்பர் மார்க்கெட் டொட்கொம் இணையத்தளம், பொருட்களின் விலை மற்றும் சேவை குறித்து ஒரு ஆய்வு செய்தது.

அதன் விபரம் வருமாறு;

கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கும் போது, எந்தவித கேள்வியும் கேட்காமல் வாங்குவதாக ஆய்வில் பங்கேற்க 10 இல் 9 பேர் தெரிவித்துள்ளனர். குறிப்பாக விலையைக் குறைக்கச் சொல்லி பேரம் பேசுவதில்லையாம். இதுதவிர, வாங்கிய பொருள் அல்லது சேவையில் குறை இருந்தால் கூட அதை மாற்றித் தரும்படியோ, பணத்தைத் திருப்பித் தரும்படியோ கேட்பதில்லை என்பது தெரிய வந்துள்ளது. குறைந்த பட்சம் பொருளின் குறைபாடு குறித்து வாங்கிய நிறுவனத்திடம் புகார் செய்வதைக் கூட அவர்கள் விரும்புவதில்லை. இதன்மூலம் பிரிட்டன் வாசிகளுக்கு ஆண்டுக்கு தலா 7 இலட்சம் ரூபா இழப்பு ஏற்படுகிறது. ஒட்டுமொத்த வாடிக்கையாளர் இழப்பு 17 இலட்சம் கோடி ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

சிறந்த சேவை, விலையில் தள்ளுபடி மற்றும் பொருளை மாற்றித் தரக் கோருதல் ஆகியவற்றை அவர்கள் விரும்பாததற்கு 5 காரணங்களைக் கூறி உள்ளனர். வாக்குவாதம் செய்யப் பயம் (90%), தள்ளுபடியை விரும்பாதது (88%), கீழ்த்தரமான செயலாகக் கருதுதல் (82%), புகார் செய்வதை விரும்பாமை (67%) மற்றும் போதிய நேரமின்மை (59%) ஆகியவை அந்த 5 காரணங்கள் ஆகும்.







அமெரிக்காவில் 34 வருடங்களின் பின்னர் திருடி ஒருவர் பிடிபட்டுள்ளார்.

சுமார் 34 வருடங்களுக்கு முன்னர் திருடிய குற்றச்சாட்டிற்காக சிறையிலடைக்கப்பட்ட பவுலா கரோல் 1975 ஆம் ஆண்டு 21 வயதில் தப்பிச் சென்றார். அதன் பின்னர் வேறு பெயரில் புளோரிடா மாநிலத்தில் வசித்து வந்தார். எனினும் பொலிஸார் அவரைத் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

இப்படியான ஒரு தினம் வரும் என தான் எதிர்பார்த்ததாக பவுலா தெரிவித்தார். இது குறித்து பொலிஸார் தெரிவிக்கையில் பவுலாவுக்கு திருட்டுக் குற்றச்சாட்டிற்காக 5 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்த போதும் அவர் ஒரு வாரத்தில் சிறையிலிருந்து தப்பிவிட்டார். எனினும், அவரது தண்டனையை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார்.

# 34 வருடங்களின் பின் பிடிபட்ட திருடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணியிலிருந்து விலகுமாறு அதிகரிக்கும் நெருக்கடி

இலங்கையின் கிரிக்கெட் அணியில் சனத் ஜெயசூர்யா தொடர்ந்து விளையாடி வருவது கிரிக்கெட் ரசிகர்களிடையே தொடர்ந்தும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது.

மேற்கிந்திய தீவுகளில் நடந்த இருபது ஓவர் கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணி அரையிறுதியாட்டத்தில் தோற்றுள்ள நிலையில் இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது.

இலங்கை அணியின் முன்னாள் தலைவரான சனத் ஜெயசூர்யா மாபெரும் நட்சத்திர அந்தஸ்துடன் விளையாடி வந்தவர் என்றாலும் அவர் சிறப்பாக விளையாடிய காலம் முடிந்துவிட்டது. ஆனால், தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அவர் அணியில் நீடிக்கிறார் என்று பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தேசிய அணியில் இடம்பெற்று சர்வதேச கிரிக்கெட் விளையாடுவது என்பது இதற்கு முன் உலகில் நடந்ததில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக அண்மைய தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சனத் ஜெயசூர்யா கிட்டத்தட்ட 41 வயதாகியும் தனது விளையாட்டு வாழ்க்கையை நீடித்துள்ளார். அடுத்த உலகக் கிண்ணத்திலும் ஆடப்போவதாகக் கூறுகிறார்.

மேற்கிந்திய தீவுகளில் நடந்த இருபது ஓவர் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி அரையிறுதிவரை வந்திருந்தது. ஆனால், ஜெயரிர்யாவோ ஆடிய ஆறு போட்டிகளில் மொத்தமாகப் பதினைந்து ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தார். அதுவும் இலங்கை கடைசியாக விளையாடிய நான்கு போட்டிகளில் அவர்தான் தொடக்க ஆட்டக்காரர் என்றாலும் அவரால் ஓட்டமெடுக்க முடியவில்லை.

இலங்கையைப் பொறுத்தவரை தேசிய கிரிக்கெட் அணியில் விளையாடத் தேர்வுக் குழுவினர் தெரிவு செய்யும் வீரர்களுக்கு நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சர் ஒப்புதல் வழங்க வேண்டுமென்ற நிலையுள்ளது. சனத் ஜெயசூர்யா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற வேண்டுமென ஊடகங்களிலும் இணையத்தளங்களிலும் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

அதேநேரம், சனத் ஜெயசூர்யா அணியில் நீடிப்பதற்கு ஆதரவாகவும் சில ரசிகர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.






# நண்பனின் வாழ்வில் ஒளியேற்றிய சச்சின்





கிரிக்கெட் அரங்கில் சாதனை நாயகனான சச்சின், சேவைப் பணிகளிலும் அசத்துகிறார். விபத்தில் படுகாயமடைந்த தனது நண்பனின் சத்திர சிகிச்சைக்கான செலவை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்திய அணியின் 'மாஸ்டர் பேட்ஸ் மேன்' சச்சின். இவரது இளமைக்கால நண்பர் தான் சகலதுறை வீரர் 'தல்பிர் சிங் கில். இருவரும் 17 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகளில் இணைந்து விளையாடியுள்ளனர். அப்போது ஒரே அறையில் தங்கியுள்ளனர். ஒன்றாக பயிற்சி செய்துள்ளனர். காலம் மாறியது; காட்சிகள் மாறின. இந்திய அணியில் வாய்ப்பு பெற்ற சச்சின், 'கிரிக்கெட் கடவுளாக' உருவெடுத்தார்.

மறுபக்கம் தல்பிர் சிங்கை துரதிர்ஷ்டம் துரத்தியது. 2002 இல் மோட்டார் சைக்கிளில் சென்ற இவர், 'டாங்கர் லொறி மீது மோதி, பெரும் விபத்தில் சிக்கினார். இடுப்பு பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டு, சுமார் 8 மாதங்களுக்கு 'கோமா' நிலையில் இருந்துள்ளார். கால்கள் பாதிக்கப்பட்டதால், நடக்க முடியாது. மூளையில் காயம் ஏற்பட்டதால், பேசும் திறனையும் சிறிது காலத்துக்கு இழந்தார். பழைய நிலைக்கு திரும்ப வேண்டுமானால், இடுப்பு பகுதியில் சத்திரசிகிச்சை செய்ய வேண்டுமென டாக்டர்கள் கூறியுள்ளனர். இதற்கு 6 இலட்சம் ரூபா செலவாகுமெனவும் தெரிவித்தனர்.

**சத்திர சிகிச்சை வெற்றி**

இதைக் கேட்ட தல்பிர் குடும்பம் ஆடிப்போனது. அந்த நேரத்தில் தான் சச்சின் பெயர் நினைவுக்கு வந்துள்ளது. உடனே தல்பிரின் தாயார் சுக்தயால் கவுர், கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பியுள்ளார். இதனை பார்த்ததும் நெஞ்சம் பதறிய சச்சின், பழைய நட்பை மறக்காமல் மிகுந்த பெருந்தன்மையுடன் முழு செலவையும் ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்துள்ளார். இதையடுத்து வியாழக்கிழமை ஆமதாபாத்தில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்தது.

இது குறித்து தல்பிர் கூறுகையில், 'எனது சத்திரசிகிச்சைக்கான செலவை ஏற்று மிகப் பெரும் உதவி செய்துள்ளார் சச்சின். அவருக்கு கடமைப்பட்டுள்ளேன். ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறிய பின், அவரை நேரில் சந்தித்து நன்றியை தெரிவிப்பேன்' என்றார்.

சுக்தயால் கவுர் கூறுகையில், 'எனது மகனின் மருத்துவ அறிக்கையை இணைத்து சச்சினுக்கு கடிதம் அனுப்பினேன். கடிதம் கிடைத்த சில மணி நேரத்தில், தனது நண்பனின் சத்திரசிகிச்சை செலவு அனைத்தையும் ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தார்' என்றார்.

**மீண்டும் புன்னகை**

இது குறித்து சச்சின் கூறுகையில், 'தல்பிர் வாழ்வில் மீண்டும் புன்னகையை கடவுள் கொடுக்க வேண்டும். சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடந்ததில் மிகவும் மகிழ்ச்சி. அவரது மருத்துவ அறிக்கையை இந்திய கிரிக்கெட் சபை மருத்துவ ஆலோசகர் ஆனந்த் ஜோஷிக்கு அனுப்பியுள்ளேன். அவரது பதிலுக்காக காத்திருக்கிறேன்' என்றார்.

ஏற்கனவே மும்பையில் உள்ள 'அப்னாலயா' அமைப்பின் மூலம் 200 ஏழைக் குழந்தைகளின் படிப்பு செலவு முழுவதையும் சச்சின் ஏற்றுள்ளார். தற்போது நண்பரின் சிகிச்சைக்கு உதவி அவரது வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகலிரவு டெஸ்டுக்கு ஐ.சி.சி. தயாராகிறது

டெஸ்ட் போட்டிகளும் விரைவில் பகலிரவு ஆட்டங்களாக நடத்தப்படுமென்று சர்வதேச கிரிக்கெட் சபைத் (ஐ.சி.சி.) தலைவர் டேவிட் மோர்கன் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் பார்படோஸில் புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இது குறித்து மேலும் கூறியதாவது;

இருபது ஓவர்கள் போட்டிகள் அதிக வரவேற்பைப் பெற்றிருந்தாலும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளும் தொடர்ந்து நடைபெறும். இங்கிலாந்தில் இன்றும் டெஸ்ட் போட்டிகளுக்குத்தான் அதிக வரவேற்புள்ளது. இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகள் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று விளையாடும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான ரிக்கற்றுகள் விரைவில் விற்றுவிடுகின்றன.




டெஸ்ட் போட்டிகளை பகலிரவு ஆட்டமாக நடத்தும் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும். பகலிரவு டெஸ்ட் போட்டிகளில் முதல் முறையாக அவுஸ்திரேலியா அல்லது இந்தியாவில் நடத்தப்படும் ஐ.சி.சி. கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்படுமென்றார்.

குழுவில் ஹேஸ்டன்;

பகலிரவு டெஸ்ட் போட்டி தொடர்பாக விவாதிக்க அமைக்கப்பட்டுள்ள குழுவில் இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரும் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரருமான கேரி ஹேஸ்டனும் இப்போது சேர்க்கப்பட்டுள்ளார்.

இதில் ஏற்கனவே ரவிசாஸ்திரி, மேற்கிந்திய தீவுகள் முன்னாள் கப்டன் கிளைவ் லொயிட், தென்னாபிரிக்காவின் மிக்கி ஆர்தர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இப்போது மிக்கி ஆர்தருக்குப் பதிலாக ஹேஸ்டன் இடம்பெற்றுள்ளார். இந்தக் கூட்டத்தில் பகலிரவு டெஸ்ட் போட்டி மற்றும் அதில் வெள்ளை மற்றும் சிவப்பு என இரு நிறப் பந்துகளைப் பயன்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் நடந்து முடிந்த 20-20 உலகக் கிண்ணப் போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த அவர், போட்டி எதிர்பார்க்கப்பட்டதை விடச் சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடந்து முடிந்தது. கிரிக்கெட் ஆட்டம் நடைபெறும்போது உள்ளூர் ரசிகர்களின் ஆதரவே மிக முக்கியம். மேற்கிந்தியதீவுகள் அரையிறுதிக்குச் செல்லாத நிலையிலும் அந்நாட்டு ரசிகர்கள் தொடர்ந்து போட்டிகளைப் பார்க்க வந்து ஆதரவளித்தனர்.

**பாகிஸ்தானில் கிரிக்கெட்?** பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படாமலுள்ளது கவலையளிக்கும் விடயம்தான். பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக அங்கு சர்வதேசப் போட்டிகளை நடத்த வேண்டாமென்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் மோர்கன் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் 2009 மார்ச்சில் இலங்கை வீரர்கள் சென்ற பஸ் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நிகழ்த்தினர். அதன் பிறகு அங்கு சர்வதேசப் போட்டிகள் ஏதும் நடத்தப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.



# நடுவரிசை நாயகன்

## தெரிந்து கொள்ளுங்கள்

அவுஸ்திரேலியாவின் சிறந்த நடுவரிசைதுடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்தவர் டேமியன் மார்டின்.

இவர் 1971 அக்டோபர் 21 ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் டார்வினில் பிறந்தார். வலது கை துடுப்பாட்ட வீரரான இவர் 1992 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியாவுக்காக முதன் முதலாகக் களமிறங்கினார்.

அப்போது நடுவரிசையில் களமிறங்கிய இவர், அந்தத் தொடரில் சிறப்பாக விளையாடி 168 ஓட்டங்கள் குவித்தார். அதேயாண்டில் ஒருநாள் அணியிலும் இடம்பிடித்தார்.

2003 தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணிக்கு எதிரான ஆட்டத்தில் கப்டன் ரிக்கி பொண்டிங்குடன் இணைந்து அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார்.

அப்போட்டியில் அவர் 88 ஓட்டங்களெடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்தார். அவருடைய அதிரடி ஆட்டம் அவுஸ்திரேலிய அணி கிண்ணம் வெல்ல உதவியாக இருந்தது என்றால் அதுமிகையல்ல.

2000 இல் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடிய மார்டின் 2001 ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக விஸ்டனால் தேர்வு செய்யப்பட்டார்.

2004 இல் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இரு சதங்களை விளாசி அத்தொடரை அவுஸ்திரேலியா 3-0 என்று வெல்வதற்குக் காரணகர்த்தாவாக இருந்தார்.

அதன்பிறகு இந்திய மண்ணில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடி 30 ஆண்டுகளுக்குப் பிறகு அவுஸ்திரேலியா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியைப் பெறுவதற்கு உதவினார். அத்தொடரில் தொடர்நாயகன் விருதையும் அவர் தட்டிச்சென்றார்.

2006 டிசம்பரில் உள்ளூர் மற்றும் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

67 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மார்டின் 4,406 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 13 சதங்கள், 23 அரைச்சதங்கள் அடங்கும். 208 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 5,346 ஓட்டங்கள் குவித்துள்ளார். முதல்தர கிரிக்கெட்டில் 204 போட்டிகளில் 14,630 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

சமீபத்தில் முடிவடைந்த ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு விளையாடுவதற்காக மார்டின் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயிலாந்தில்

## ஆர்ப்பாட்டம்-அச்சுறுத்தல்-வன்முறை

உலக வலம்

யோ.நிமல்ராஜ்

உலகின் எந்தவொரு நாட்டினை நோக்கினாலும் அங்கு ஏதோ ஒரு வடிவிலான பிரச்சினைகளும் குழப்பங்களும் அன்றாடம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

அல்லது இயற்கையின் அனர்த்தங்களால் அந்த நாட்டில் உயிர் மற்றும் பொருளாதார பேரழிவுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.



இந்நிலையில்,பெரும்பாலான நாடுகளில் காணப்படும் குழப்பநிலைகளுக்கு 'அரசியல் நிலைவரமே' முக்கிய அடித்தளமாக அமைந்துள்ளது.


அரசியல் அபிலாசைகளை இலக்காக கொண்டு பொது மக்களை பகடைக்காயாகப் பயன்படுத்தி பெரும்பாலான அரசியல்வாதிகள் சுயலாப நோக்கிலும் தமது குடும்பங்கள் அல்லது பரம்பரையை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்யும் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர்.

இதற்காக பொதுமக்களின் உயிரைக்கூட துச்சமாக மதித்து அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான அரசியல் சூழல்களுடன்தான் கடந்த மார்ச் மாதம் முதல் தாய்லாந்தில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்கள் மக்களின் நன்மைக்காக முன்னெடுக்கப்படுகின்றதா அல்லது இதன் பலாபலன்கள் தீமையில் நிறைவுறுமா என்பது ஒருபுறம் இருக்க இன்று தாய்லாந்து மக்களின் இயல்பு நிலை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறலாம்.

முக்கிய சந்தைத் தொகுதிகளும் பாடசாலைகளும் சில நாட்கள் திறக்கப்படுவதும் பலநாட்கள் மூடப்படுவதுமாக உள்ளது.



இந்த ஆர்ப்பாட்டத்தின் பிரதான கருவை நோக்குமிடத்து தற்போது பிரதமராகவுள்ள அபிசித் வெஜ்ஜஜிவா பதவியிலிருந்து விலகி புதிய தேர்தலை நடத்த வேண்டுமென்பதே இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை ஆகும்.

முன்னாள் பிரதமர் தக்ஷின் சினவத்ராவின் ஆதரவாளர்களான சிவப்புச் சட்டைக்காரர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தக்ஷின் சினவத்ராவின் உண்மையான ஆதரவாளர்களா அல்லது அவரின் உந்துதலில் செயற்படும் கூலிப்படைகளா என்பது புலப்படவில்லை.

தக்ஷின் சினவத்ரா பதவி கவிழ்க்கப்பட்ட காலப்பகுதி முதல் அவரது ஆதரவாளர்கள் அடிக்கடி அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தாலும் கடந்த மார்ச் முதல் அது தீவிரமடைந்து பல வடிவங்களைக் கண்டு தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

தமது கோரிக்கைகளை வெளி உலகிற்கு வெளிப்படுத்துவதற்கு இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வித்தியாசமான பாணியிலான உத்தி ஒன்றைக் கையாண்டிருந்தார்கள்.

அதாவது ஆதரவாளர்களிடமிருந்து இரத்தத்தை சேகரித்து அதனை போத்தல்களில் நிரப்பி பிரதமர் அலுவலகம்,பிரதமர் இல்லம்,பாராளுமன்றம் உள்ளிட்ட அரச கட்டிடங்கள் மீது இரத்தத்தை தெளித்திருந்தனர்.

ஆனாலும் ஐ.நா.சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களும் வெளிஉலக நாடுகளும் இந்த ஆர்ப்பாட்டத்தின் மீது அக்கறை கொண்டதாக தெரியவில்லை.

இருந்தாலும் கடந்த இரண்டரை மாதங்களாக பாங்கொக்கில் கூடிய ஆதரவாளர்கள் தமது போராட்டத்தை கைவிடவில்லை.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்களை கலையச் செய்வதற்கு அரசு படைப்பலத்தினை பிரயோகித்தும் அவர்கள் கலையவில்லை மாறாக இருதரப்புக்குமிடையே மோதல்கள் இடம்பெற்று இதில் 40 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறாக ஆர்ப்பாட்டக்காரர்களும் அரசும் விடாப்பிடித்தனத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றாதிருப்பது மக்களின் இயல்பு வாழ்க்கையை தொடர்ந்தும் பாதிப்பதாகவே உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் எவ்வாறான முடிவினை பெற்றுக் கொள்ளும் என்பதை அறிய நாம் காத்திருக்க வேண்டும்.

ஆனால்,ஜனநாயகத்தை மதிக்கும் ரீதியில் முடிவுகள் மேற்கொள்ளப்படின் அவை பாராட்டுக்குரியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீறும் பாம்பும் சிரிக்கும் பெண்ணும்

பொதுசன நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.













பிரான்சின் தென்பகுதியில் கேன்ஸ் நகரில் நடைபெறும் 63ஆவது சர்வதேச திரைப்படவிழாவில் பொலிவூட் கவர்ச்சி நடிகை மல்லிகா ஷெராவத் பாம்புகளுடன் கொஞ்சிக் குலாவி கொடுத்த 'போஸ்'கள்

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு [illegible] 2010 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org